

# தென்னாடு

செந்தமிழாகம சிவமடம். கொக்குவில், யாழ்ப்பாணம். www.thennadu.org

மேழ விழுகம்ப ஊழி ஆண்டு 2298 சுறவம் நல்லோரை தைத் திங்கள் 1ம் நாள் (14-01-2025 செவ்வாய்க்கிழமை) வெளியீடு +94 21 222 9722



முதன்முறையாக யாழ்ப்பாணத்தில் யானைகள் மீது திருமுறைகள் மற்றும் சித்தாந்த சாத்திரங்கள் நகர்வலம்

# காதல் மடப்பிடியோடுங் களிறு வருவன கண்டேன் கண்டேன் அவர் திருப்பாதம் கண்டறியாதன கண்டேன்













தென்னாடு

செந்தமிழாகம சிவமடம். கொக்குவில், யாழ்ப்பாணம். www.thennadu.org





**சிவத்திரு. தென்னவன் பார்த்தீபன் - தலைமை ஆசிரியர்,**
BSc Eng (Hons) CPEng (Aust) FIEAust MA (Philosophy)
+6149949 3300, thennavan@thennadu.org




# மார்கழிப் பெருவிழா மகத்தான வெற்றி

மார்கழி என்பது வழிபாட்டிற்கு உகந்த மாதம். இறைசிவன் இல்லங்கள் தோறும் எழுந்தருளிச் செங்கமலப் பொற்பாதந் தந்தருளும் சிறப்பான மாதம். மார்கழித் திங்கள் முழுவதும் அதிகாலையில் எழுந்து இறைவனை வழிபடுதல் சாலவும் சிறந்தது. இம்முறை திருக்கைலாய பரம்பரை பெருங்குளம் செங்கோல் மடத்தின் 103 வது குருமகாசந்நிதானம் சீர்வளர்சீர் சிவபிரகாச தேசிக சத்தியஞான பண்டார சன்னதி சுவாமி களின் வேண்டுதலின் வண்ணம், கொக்குவில் தென்னாடு செந் தமிழ் ஆகம சிவமடத்தில் மார்கழித் திங்கள் முழுவதும் அதி காலையில் சிறப்பு வழிபாடுகள் இடம்பெற்று, இன்று திரு வெம்பாவை இறுதிப் பூசைகளுடன் ஆடல்வல்லான் புறப் பாடும் இடம்பெற்று, ஆதிரை அருட்காட்சி வழிபாடுகளுடன் முடி வடையும்.

இதன் ஒரு அங்கமாக, கொக்குவில் தென்னாடு செந்தமிழ் ஆகம சிவமடத்தின் சைவ மாணவர் சபையினால் ஆண்டு தோறும் சைவத்தினையும், தமிழினையும் போற்றி, மார்கழிப் பெருவிழா எனும் திருமுறை விழா யாழ்ப்பாணத்தில் நடை பெற்று வருகிறது. இம்முறை நான்காவது ஆண்டாக ஆடல் வல்லானுடன் திருமுறைகள் மற்றும் சித்தாந்த சாத்திரங்கள் களிற்றின் மீது நகர்வலமாக எடுத்துவரப்பட்டு, யாழ்ப்பாணம் கலாசார மண்டபத்தில் முழுநாள் விழாவாக மிகவும் சிறப் பாக நடைபெற்றது. இதற்கு துணைநின்ற அனைவருக்கும் தென்னாடு மடத்தின் சார்பில் நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

கோயில் திருவிழாக்கள், நாயன்மார் குருபூசைகள் மற்றும் நாயன்மார் விழாக்கள், சேக்கிழார் விழா, சமய ஊர்வலங்கள் மற்றும் சமய விழாக்கள் போன்றவை இலகுவாக நன்மை பெருகு அருள்நெறியாகிய சைவநெறியை இலகுவாக மக் களிடையே கொண்டுபோய்ச் சேர்க்கிறன. எனது சிறு வயதில் பெற்றோரின் உந்துதலால் பல கோயில் விழாக்களில் சென்று பங்கேற்றோம். மேலும் நான் கல்வி கற்ற யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரியில் பல விழாக்கள் மற்றும் சமய ஊர் வலங்கள் விடாது நடைபெற்றன. சைவத் தமிழ்ப் பற்றுள்ள சிறந்த ஆசிரியர்கள் இருந்து எங்களை ஈடுபட வைத்தார்கள். வழி நடத்தினார்கள். இந்த விதையே எங்களிடையே இன்று மரமாக மாறியுள்ளது.அவர்கள் எங்களுக்குத் தந்த அறிவை, அனுபவத்தினை, பண்பாட்டினை அடுத்த தலைமுறைக்கு எடுத்து செல்வது எங்களது தலையாய கடனாகும். திருவருள் துணை நிற்க, இதன் வெளிப்பாடாகவே எங்கள் எண்ணங்களும், செயற்பாடுகளும் அமைகின்றன. தமிழ் வேதம் உரைப்பது போல் அறவழி நின்று, பொருள் ஈட்டி, இன்பமாய் வாழ்ந்து பின்னர் வீடுபெறுவதே தமிழரின் வாழ்வியல்.

எனவே சைவத்தமிழ் விழாக்களை போற்றுவோம். விழாக்கள் வைப்பதற்கு துணை நிற்போம் ஆதரவளிப்போம். குறிப்பாக பாடசாலைகளில் மாணவர் மத்தியில் வைக்கும் விழாக்களுக்கு ஆதரவளியோம் மற்றும் நன்கொடை வழங்குவோம். பண்பாட்டு வளர்ச்சிக்கு மீட்சிக்கு விழாக்களின் வகிபாகத்தினை உணரு வோம் உரைப்போம். விழாக்களை வீட்டிலேயே தொடங்கலாம். பொங்கலை, தைப்பூசத்தினை, வருடப்பிறப்பை விளக்கீட்டினை, ஆதிரைநாளினை, திருவெம்பாவையை கொண்டாடுவோம். இளையவர்களை ஈடுபடுத்துவோம்.

**மைப்பூசும் ஒண்கண் மடநல்லார் மாமயிலைக்**
**கைப்பூசு நீற்றான் கபாலீச்சரம் அமர்ந்தான்**
**நெய்ப்பூசு மொண்புழுக்கல் நேரிழையார் கொண்டாடுந்**
**தைப்பூசங் காணாதே போதியோ பூம்பாவாய் - திருஞானசம்பந்தர்**

**மேன்மைகொள் சைவநீதி விளங்குக உலகமெல்லாம்.**



# தென்னாடு

செந்தமிழாகம சிவமடம். கொக்குவில், யாழ்ப்பாணம். www.thennadu.org

**சிவத்திரு. தென்னாடு நிலவன்**
அடுத்த தலைமுறை ஆசிரியர் – தென்னாடு,
செந்தமிழ் ஆகம சிவமடம் – கொக்குவில்.
+94 (77) 671 6678 | nilavan@thennadu.org



# தென்னாடு நிறைமதி அறிக்கை

(15-12-2024) – மேழ விழுகம்ப ஊழி ஆண்டு 2298 நளி நல்லோரை கார்த்திகைத் திங்கள் 30ம் நாள் நிறைமதி அன்று (15-12-2024 ஞாயிற்றுக்கிழமை) ஐம்பத்து இரண்டாவது தென்னாடு திங்கள் செய்தியிதழ் வெளியீடு நிறைமதி வழிபாட்டுடன் சிறப்பாக இடம்பெற்றிருந்தது.

இந்நிகழ்வில் யாழ்ப்பாணப் பல்கலைக்கழக துணைவேந்தர் சிவத்திரு. சிவக்கொழுந்து சிறிசற்குணராசா ஐயா அவர்கள், கோப்பாய் ஆசிரியர் கலாசாலை அதிபர் சிவத்திரு. சந்திர மௌலீசன் லலீசன் ஐயா அவர்கள், முன்னாள் யாழ் வலயக்கல்விப் பணிப்பாளர் சிவத்திரு. அ. அகிலதாஸ் ஐயா அவர்கள், யா / பெரியபுலம் மகா வித்தியாலய அதிபர் சிவத்திரு. ந. பரமேஸ்வரன் ஐயா அவர்கள், கலாநிதி கிருபாசக்தி அம்மையார் அவர்கள் (இசைத்துறை முதுநிலை விரிவுரையாளர், யாழ்ப்பாணப் பல்கலைக் கழகம்) மற்றும் அடியார்கள் பலரும் கலந்து சிறப்பித்திருந்தனர். இந்நிகழ்வில் துணைவேந்தர் ஐயா அவர்கள் கோப்பாய் ஆசிரியர் கலாசாலை அதிபர் சிவத்திரு. சந்திரமௌலீசன் லலீசன் ஐயா அவர்களுக்கு முதல் இதழினை வழங்கி, தென்னாட்டின் ஐம்பத்து இரண்டாவது திங்கள் இதழை வெளியிட்டு வைத்திருந்தார்.

(16-12-2024) – மார்கழித் திங்கள் 1ம் நாள் தொடக்கம் அதிகாலை பூசை வழிபாடுகள் ஆரம்பமாகி இடம்பெற்றிருந்தன. மார்கழி முழுவதும் தொடர்ந்து அதிகாலை வழிபாடுகள் இடம்பெற்றன. (16-12-2024) – அமாரர் சிவத்திரு. சிவசம்பு குணரத்தினம் அவர்களின் (தென்னாடு முதல்வர் அவர்களின் தந்தையார்) ஆண்டு திதி வழிபாடுகள் சிறப்பாக இடம்பெற்றன. (17-12-2024) – அமாரர் சிவத்திரு. முத்துக்குமாரசுவாமி இரஜந்தகுமாரசுவாமி அவர்களின் ஆண்டு திதி வழிபாடுகள் சிறப்பாக இடம்பெற்றன. (22-12-2024) – மார்கழிப் பெருவிழாவை முன்னிட்டு சிவத்தமிழ் வித்தகர் சிவ. மகாலிங்கம் அவர்களின் நினைவாக திருவாசகப் பேச்சுப் போட்டிக்கான தேர்வுகள் தென்னாடு சிவமடத்தில் இடம்பெற்றிருந்தது.

(25-12-2024) – ஈழத்திருநாட்டில் கடந்த 2021ம் ஆண்டில் இருந்து தென்னாடு செந்தமிழ் ஆகம சிவமடத்தின் சைவ மாணவர் சபை, ‘மார்கழிப் பெருவிழா’ எனும் கருத்தாக்கத்தில் சிவத்தின் மற்றும் சைவத்தின் பெருமைகளை திருமுறைகள் வழி எடுத்தியம்பும் பிரமாண்ட விழாவாக கொண்டாடிவருகிறது. இம்முறை நான்காவது ஆண்டாக யானைகள் மீது திருமுறைகள் மற்றும் சித்தாந்த சாத்திரங்கள் நகர்வலத்துடன் மிகச் சிறப்பாக இடம்பெற்றிருந்தது.

(26-12-2024) – செந்தமிழ் வழிபாட்டுப் பயிற்சிப் பட்டறை இடம்பெற்றிருந்தது. யாழ்ப்பாணம் இந்து ஆரம்பப் பாடசாலை பிரதான மண்டபத்தில் இந்நிகழ்வு இடம்பெற்றிருந்தது. இந்நிகழ்வில் பழனி ஆதீன குருமகாசந்நிதானம் தவத்திரு. சாது சண்முக அடிகளார், சிவகுரு ஆதீன முதல்வர் தவத்திரு. வேலன் சுவாமிகள், செந்தமிழ் வேள்வி வித்தகர் சிவ. பழனிச்சாமி குமரலிங்கம் ஐயா அவர்கள், தஞ்சாவூர் தமிழ்ப் பல்கலைக் கழகம் உதவிப்பேராசிரியர் முனைவர் கோ.ப.நல்லசிவம் ஐயா அவர்கள், தென்னாடு முதல்வர் சிவத்திரு. தென்னவன் பார்த்தீபன் ஐயா அவர்கள் ஆகியோர் கலந்து கொண்டு தமது கருத்துரைகளை வழங்கியிருந்தனர். அந்நாளில் வெளி மாவட்டங்களைச் சேர்ந்த 200இற்கும் மேற்பட்ட அறநெறி ஆசிரியர்கள் மற்றும் அறநெறி அமைப்பாளர்கள் ஆகியோர் கலந்து கொண்டு பயன்பெற்றிருந்தனர்.

(27-12-2024) – ஈழநாட்டு தேவாரத்தல யாத்திரைக்கு வருகை தந்திருந்த தருமையாதீன குருமகாசந்நிதானம் அவர்களை தென்னாடு சிவமடத்தினர் திருகோணமலை மற்றும் திருக்கேதீச்சரத்தில் சந்தித்தித்து அருளாசி பெற்றிருந்தனர். (28-12-2024) – சிவகுரு ஆதீன திருமடம் கட்டியெழுப்ப வேண்டி தென்னாடு ஐம்பூதநாதர் திருக்கோயிலில் திருமஞ்சன வழிபாடுகள் இடம்பெற்றன. இவ்வழிபாட்டை செந்தமிழ் வேள்வி வித்தகர் சிவ. பழனிச்சாமி குமரலிங்கம் ஐயா அவர்கள் ஆற்றி வைத்தார்கள். (28-12-2024) – மார்கழித் திங்கள் வளர்பிறைக் கழுவாய் வழிபாடுகள் சிறப்பாக இடம்பெற்றன.

(28-12-2024) – உரும்பிராய் அருள்மிகு மலைவளர் காதலி (பர்வதவர்த்தினி அம்மன்) கோயிலில் நடைபெற்ற திருவாசக முற்றோதலின் தென்னாடு சிவமடத்தினர் பங்கேற்பு செய்திருந்தனர். (29-12-2024) – யாழ்ப்பாணப் பல்கலைக்கழக சைவசித்தாந்தத் துறையும் உயர்பட்டப்படிப்புகள் பீடத்தின் எட்டாவது சைவசித்தாந்த முதுமாணிக் கற்கை அணியும் இணைந்து நடாத்திய கருத்தரங்கில் முனைவர் கோ.ப.நல்லசிவம் ஐயா அவர்கள் ‘திருநெறிய தமிழும் சைவசித்தாந்த வாழ்வியலும்’ தலைப்பில் ஆய்வுரை வழங்கி வைத்திருந்தார்.

(31-12-2024) – தென்னாடு ஐம்பூதநாதர் திருக்கோயிலில் திருவாசக முற்றோதல் இடம்பெற்றது. (03-01-2025) – திருவெம்பாவை பூசைகள் ஆரம்பம். காலை 4.30 மணிக்கு திருப்பள்ளி எழுச்சி படிக்கப்பட்டு, 5 மணிக்கு பூசைகள் ஆரம்பமாகி வழிபாடுகள் இடம்பெற்றன. தொடர்ந்து பத்து நாட்களும் இவ்வாறு வழிபாடுகள் இடம்பெற்றன.

திருச்சிற்றம்பலம்

# புலவரேறு ந.ரா.முருகவேள் அவர்களின் நூற்றாண்டு விழா



**”திருக்கோயில்”** இதழாசிரியர், செந்தமிழ்ச் சைவமணி சித்தாந்தப் புலவர்மணி, தருமை ஆதீனத் தமிழ்ப்புலவர் புலவரேறு ந.ரா.முருகவேள் ஆ.யு.ஆ.மு அவர்களின் நூற்றாண்டு விழா, அருள்மிகு. முத்தையா மணிவிழா மண்டபத்தில், 29-12-2024 ஞாயிற்றுக் கிழமை அன்று சென்னை தெய்வீக சித்தாந்த இலக்கிய மன்றத்தினரால் காலை 9.30 - 12.30 மணி வரை ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது.

இந்நிகழ்வில் திருக்கயிலாய பரம்பரைத் தருமைஆதீனம் 27 வது குருமகா சந்நிதானம் திருப்பெருந்திரு மாசிலாமணி தேசிக ஞானசம்பந்த பரமாசாரிய சுவாமிகள் கலந்து கொண்டு அருளாசிகள் வழங்கியிருந்தார். மேலும் தருமையாதீனப் புலவர் நா.ரா.முருகவேள் அவர்கள் நூற்றாண்டு விழா மலர் வெளியிடப்பட்டதோடு, குருமணிகள் மணிவிழா நிகழ்வு 365 நூல் வெளியீட்டில் 73வது வெளியீடாக இருபா இருபஃது நா ரா முருகவேள் உரையுடன் வெளியிட்டும் வைக்கப்பட்டது.

இந்நிகழ்வில் மு.பெ. சத்தியவேல் முருகனார், செந்தமிழரசு கி. சிவகுமார் ஐயா உட்பட மேலும் பல பிரமுகர்களும் கலந்து சிறப்பித்திருந்தமை சிறப்பம்சமாகும்.

**திருச்சிற்றம்பலம்**

# தென்னாட்டின் செந்தமிழ் வழிபாட்டுப் பயிற்சிப் பட்டறை



தென்னாடு சைவ மாணவர் சபை நடாத்திய மார்கழிப் பெருவிழாவின் தொடர்ச்சியாக செந்தமிழ் வழிபாட்டுப் பயிற்சிப் பட்டறை ஒழுங்கமைக்கப்பட்டிருந்தது. அந்தவகையில் மார்கழித் திங்கள் 11ஆம் நாள் 26-12-2024 அன்று, காலை 9மணி தொடக்கம் 12மணி வரை யாழ்ப்பாணம் இந்து ஆரம்பப் பாடசாலை பிரதான மண்டபத்தில் இந்நிகழ்வு இடம்பெற்றிருந்தது.

இந்நிகழ்வில் பழனி ஆதீன குருமகாசந்நிதானம் தவத்திரு. சாது சண்முக அடிகளார், சிவகுரு ஆதீன முதல்வர் தவத்திரு. வேலன் சுவாமிகள், செந்தமிழ் வேள்வி வித்தகர் சிவ. பழனிச்சாமி குமரலிங்கம் ஐயா அவர்கள், தஞ்சாவூர் தமிழ்ப் பல்கலைக்கழகம் உதவிப் பேராசிரியர் முனைவர் கோ.ப.நல்லசிவம் ஐயா அவர்கள், தென்னாடு முதல்வர் சிவத்திரு. தென்னவன் பார்த்தீபன் ஐயா அவர்கள், யாழ்ப்பாணம் இந்து ஆரம்பப் பாடசாலை அதிபர் சிவத்திரு. பேரம்பலம் தனபாலசிங்கம் அவர்கள் ஆகியோர் கலந்து கொண்டு தமது கருத்துரைகளை வழங்கியிருந்தனர்.

நிகழ்வில் செந்தமிழ் வேள்வி வித்தகர் சிவ. பழனிச்சாமி குமரலிங்கம் ஐயா அவர்கள் தலைமை ஏற்று, செந்தமிழ் வழிபாடு தொடர்பான பல விளக்கங்களையும் தெளிவுபடுத்தல்களையும் வழங்கியிருந்தார். தொடர்ந்து முனைவர் கோ.ப.நல்லசிவம் ஐயா அவர்கள் அறநெறி ஆசிரியர்களுக்கான திருமுறைப் பண்ணிசைப் பயிற்சிகளையும் வழங்கியிருந்தார். அந்நாளில் வெளிமாவட்டங்களைச் சேர்ந்த 200 இற்கும் மேற்பட்ட அறநெறி ஆசிரியர்கள் மற்றும் அறநெறி அமைப்பாளர்கள் ஆகியோர் கலந்து கொண்டு பயன்பெற்றிருந்தனர்.

**திருச்சிற்றம்பலம்**

# தேசிய ஆக்கத்திறன் போட்டிகளுக்கான விருது வழங்கல்




இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களத்தினால் இந்து சமய அறநெறிப்பாடசாலை மாணவர்களுக்கான தேசிய ஆக்கத்திறன் விருது, கடந்த 21-12-2024 சனிக்கிழமை அன்று காலை 10.00 மணிக்கு கொழும்பு இராமகிருஸ்ண மிஷின் மண்டபத்தில் நடைபெற்றது.

முதலாம் வகுப்பிலிருந்து பதினோராம் வகுப்பு வரை உள்ள மாணவர்களுக்கு போட்டிகள் நடைபெறுகிறது. தனி நபர் போட்டியாக பேச்சாற்றல், நீதிநூல் ஒப்புவித்தல், கதாப்பிரசங்கம், எழுத்தாற்றல் (கட்டுரை), சித்திரமும், குழு போட்டியாக பரதநாட்டியம், பண்ணிசையும் பஜனையும், நாடகம், வில்லுப்பாட்டு, சொல்லாடற்திறன் போட்டிகளும் நடைபெற்று முதல் மூன்று இடங்களை பெறுபவர்களுக்கு கிண்ணங்கள் வழங்கப்படுகிறது.

அந்தவகையில் கொழும்பு பம்பலப்பிட்டி இந்துக் கல்லூரியில் நடைபெறும் சைவத்தமிழ் அறநெறி பாடசாலையை சேர்ந்த ஐந்து மாணவர்கள் தேசிய ஆக்கத்திறன் விருதுகளை பெற்றுள்ளார்கள். முதலாமிடங்கள் - இரண்டு மாணவர்கள், இரண்டாமிடம் ஒரு மாணவர், மூன்றாமிடம் இரண்டு மாணவர்கள் விருதினை பெற்றார்கள்.

பேச்சு போட்டியில், வேணியா செல்வகுமார் (தரம் 3) தேசிய மட்டத்தில் முதலாமிடத்தினையும், கவிநயா செல்வகுமார் (தரம் 1) தேசிய மட்டத்தில் இரண்டாமிடத்தினையும், கே. கயல்விழி (தரம் 7) தேசிய மட்டத்தில் மூன்றாமிடத்தினையும் பெற்றார்கள். சித்திர போட்டியில், எஸ். அரவின்சன் (தரம் 2) தேசிய மட்டத்தில் முதலாமிடத்தினை பெற்றார். நீதிநூல் ஒப்புவித்தல், ஆர். ரதீசன் (தரம் 4) மூன்றாமிடத்தினையும் பெற்றார்.

திருச்சிற்றம்பலம்

# அகில இலங்கைச் சைவப்புலவர் சங்க பெறுபேறுகள் வெளியீடு

அகில இலங்கைச் சைவப்புலவர் சங்கத்தினால் 2024ம் ஆண்டில் நடாத்தப் பெற்ற சைவப்புலவர் மற்றும் இளஞ்சைவப் புலவர் பட்டத் தேர்வுகளின் பெறுபேறுகள் வெளியிடப்பட்டுள்ளன.

**சைவப்புலவர் பட்டத் தேர்வில் சித்தியடைந்தோர் விபரம்**

1. செல்வி. கீர்த்திகா றஞ்சன் (இணுவில்)
2. திரு. இராமன் இராமகிருஷ்ணன் (பத்தனை)
3. திருமதி. மனோன்மணி தட்சணாமூர்த்தி (மட்டக்களப்பு)

**இளஞ்சைவப்புலவர் பட்டத் தேர்வில் சித்தியடைந்தோர் விபரம்**

1. சந்திரகுமார் சுலெக்ஷி (வவுனியா)
2. தெய்வேந்திர மூர்த்தி செல்வநாயகி (பரந்தன்)
3. சௌந்தரலிங்கம் சதுஜா (வாழைச்சேனை)
4. செல்வநாயகம் வதனி (கோறளங்கேணி)
5. மகேந்திரன் டினுசா (வாழைச்சேனை)
6. சாமித்தம்பி கந்தசாமி (மட்டக்களப்பு)
7. மகேதீஸ்வரன் விபகரணி (மட்டக்களப்பு)
8. சந்திரமோகன் டக்சலா (கல்குடா)
9. ரவீந்திரன் அபிராமி (வாழைச்சேனை)
10. கனகலிங்கம் சதுர்ஷனா (பொலன்னறுவை)
11. தேவராசா ஜெருஷன் (வாழைச்சேனை)
12. பத்மநாதன் விஷாந்தினி (வாகனேரி)
13. திருத்தணிவாவா ஜெகநாதன் (களுவாஞ்சிக்குடி)
14. தங்கத்துரை யதுசிகா (மண்டூர்)

திருச்சிற்றம்பலம்

# தருமை ஆதீனம் 27 ஆவது குருமகாசந்நிதானம் இலங்கை வருகை

## ஈழநாட்டுப் பாடல்கள் கிடைக்கப் பெற்ற தலங்களில் வழிபாடு




திருக்கயிலாய பரம்பரை தருமை ஆதீனம் திருமுறை செப்பேடு கண்டருளிய 27 ஆவது குருமகாசந்நிதானம் சீர் வளர்சீர் கயிலை மாசிலாமணி தேசிக ஞானசம்பந்த பரமா சாரிய சுவாமிகள் அவர்கள் மேழ விழுகம்ப ஊழி ஆண்டு 2298 மார்கழித் திங்கள் 12ம் நாள் (27-12-2025) வெள்ளிக் கிழமை அன்று ஒரே நாளில் ஈழநாட்டுத் தேவாரத் திருத் தலங்களான திருக்கோணேச்சரம் மற்றும் திருக்கேதீச்சரத் தில் வழிபாடு செய்வதற்க்காக எழுந்தருளியிருந் தார்கள்.

குருமகாசந்நிதானம் அவர்கள் மாலை 3.30 மணிய ளவில் திருக்கோணேச்சரத்தில் வழிபாட்டை முடித்துக் கொண்டு, இரவு 7.30 மணியளவில் திருக்கேதீச் சரத்தில் வழிபாடு ஆற்றியிருந்தார்.

திருக்கயிலாய பரம்பரை தருமை ஆதீனம் திருமுறை செப்பேடு கண்டருளிய 27 ஆவது குருமகாசந்நிதானம் சீர்வளர் சீர் கயிலை மாசிலாமணி தேசிக ஞானசம்பந்த பரமாசாரிய சுவாமிகள் அவர்களின் மணிவிழா ஆண்டை சிறப்பிக்கும் வகை யில் வருடத்தின் 365 நாட்களும் 365 நூல்களை வெளி யிட்டு வருகின்றனர். அந்த வகையில் ஈழநாட்டுத் தேவாரத் திருத்தல வழிபாட்டின் போதும் திருக்கோணேச்சரம் மற்றும் திருக்கேதீச்சரம் ஆகிய திருத்தலங்களின் திருத்தல வரலாற்றுத் திருப்பதிகங்கள் படைக்கப் பெற்ற நூல் வெளியீட்டு வைக்கப்பட்டிருந்தது. தென்னாடு சிவமடத்தினர் சுவாமிகளிடம் அருளாசி பெற்றிட சென்றிருந்த வேளை, திருக்கோணேச்சரத்தில் வைத்து சுவாமிகள் தென்னாடு முதல்வர் சிவத்திரு. குணரத்தினம் பார்த்திபன் அவர்களிற்கு நூல் வழங்கி கௌரவித்திருந்தார்.

ஏனைய தென்னாடு சிவமட அடியார்களிற்கும் குருமகா சந்நிதானம் அவர்கள் நூல் வழங்கி கௌரவித்திருந்தார். தென்னாடு சிவமடத்தினர், சந்நிதானம் அவர்களுடன் இணைந்து திருக்கேதீச்சர வழிபாட்டிலும் ஈடுபட்டிருந் தமை இறை திருவருளாகும்.

**திருச்சிற்றம்பலம்**






# மெய்கண்டார் விருது வழங்கலும்
# திருவாசகப் போட்டிகளுக்கன பரிசில் வழங்கலும்

எந்தவித எதிர்பார்ப்பும் இல்லாமல், ஊதியம் இன்றி அல்லது மிகவும் குறைந்த ஊதியத்துடன் உழைக்கும் அறநெறி ஆசிரியர்கள், மாணவச் செல்வங்களுக்கு அறத்தினை, பண் பாட்டினை, வழிபாட்டினை, திருமுறைகளை, சாத்திரங் களை மற்றும் வாழ்வியலை எடுத்துரைக்கும் உன்னத சேவையை ஆற்றிவருகின்றனர். இவர்களை பாராட்டி வாழ்த்தும் வகையில் மார்கழிப் பெருவிழாவில் தென்னாடு செந் தமிழ் ஆகம சிவமட சைவ மாணவர் சபையினரால் அதியுயர் விருதான **“மெய்கண்டார் விருது”**, தெரிவு செய்யப்பட்ட அறநெறி ஆசிரியர்களுக்கு வழங்கி கௌரவிக்கப்பட்டிருந்தது.

அந்தவகையில் சிவ செல்வி. நவிசா ஈஸ்வரானந்தம் பன்னாலை கணேசா அறநெறிப் பாடசாலை (யாழ்ப்பாண மாவட்ட அறநெறிப் பாடசாலை), சிவ திருமதி. காமதேனு உருத்திரநாதன் சிவனருள் அறநெறிப் பாடசாலை (வவுனியா மாவட்ட அறநெறிப் பாடசாலை), சிவ திருமதி. கந்தசாமி பிரியதர்ஷினி அருள்மிகு முத்துமாரி அம்மன் திருக்கோயில் அறநெறிப் பாடசாலை (கண்டி மாவட்ட அறநெறிப் பாட சாலை), சிவ திருமதி. தேவசுதன் யதுசியா சீர்வளர்சீர் ஆறு முகநாவலர் அறநெறிப் பாடசாலை (மட்டக்களப்பு மாவட்ட அறநெறிப் பாடசாலை), சிவ செல்வி. பாலகிருஸ்ணன் அனுசியா அருள்மிகு கணேஷா அறநெறிப் பாடசாலை (பதுளை மாவட்ட அறநெறிப் பாடசாலை) ஆகியோரை மாவட்ட அடிப்படையில் தெரிவு செய்து **‘மெய்கண்டார் விருதினை’** வழங்கி வைத்திருந்தோம்.

மேலும் **“மார்கழிப் பெருவிழாவை”** முன்னிட்டு, சிவத் தமிழ் வித்தகர் சிவ. மகாலிங்கம் அவர்களின் நினைவாக , சிவபூமியில் மாணவர்கள் மத்தியில் பேச்சாற்றல் மற்றும் எழுத்தாற்றலை வளர்க்கும் மற்றும் மேம்படுத்தும் நோக் கத்துடன் இடம்பெற்றிருந்த திருவாசகப் போட்டிகளுக்கான பரிசில் வழங்கல் நிகழ்வும் அன்றைய நாளில் இடம்பெற்றி ருந்தது. அந்தவையில் திருவாசகக் கட்டுரைப் போட்டி யில் பிரிவு ஒன்றில் செல்வி சாணுகா சதீஸ்குமார் அவர்கள் மூன்றாம் இடத்தையும், திருவாசகப் பேச்சுப் போட்டியில் பிரிவு இரண்டில் செல்வன் பாலமுரளி சிவரிசன் மற்றும் செல்வன் மதிவண்ணன் தக்சனன் ஆகிய இருவரும் இரண்டாம் இடத்தையும் பெற்றிருந்தனர். அந்தவகையில் அவர்களுக் கான சான்றிதழ், பணப்பரிசில் என்பனவும் வழங்கி வைக் கப்பட்டிருந்தன.

**திருச்சிற்றம்பலம்**



**சிவ செல்வி.**
**நவிசா ஈஸ்வரானந்தம்**



**சிவ திருமதி.**
**காமதேனு உருத்திரநாதன்**



**சிவ திருமதி.**
**கந்தசாமி பிரியதர்ஷினி**



**சிவ திருமதி.**
**தேவசுதன் யதுசியா**



**சிவ செல்வி.**
**பாலகிருஸ்ணன் அனுசியா**



**சிவ செல்வி**
**சாணுகா சதீஸ்குமார்**



**சிவ செல்வன்**
**பாலமுரளி சிவரிசன்**



**சிவ செல்வன்**
**மதிவண்ணன் தக்சனன்**

# தெளிவு குருவின் திருவார்த்தை கேட்டல் – கேட்போம் தெளிவோம்



சிவஞானச் செல்வர். மருத்துவர் ஈசான பிரதாபன் தேசிகர்

**இந்துக் கல்லூரிகள், இந்து மாமன்றம், இந்து சாதனம், இந்துக் கற்கை பீடம், இந்துசமய கலாசார திணைக்களம் முதலிய பெயர்களைச் சைவசமயம் என்று மாற்றக்கூடியதாக இருக்குமா?**

எத்தனையோ கல்லூரிகள் தங்கள் பெயர்களைப் பலவாறு மாற்றிக்கொண்டுதான் உள்ளனர். சைவ வித்தியாசாலையை இந்துக் கல்லூரி என்று பெயர் மாற்றமுடியுமென்றால், இந்துக் கல்லூரியை சைவக்கல்லூரி என்று பெயர் மாற்றுவது எந்த விதத்திலும் சிரமமாகாது! உண்மையை உணர்ந்த உயர்ந்தவர்கள் அதிபர்களாகவும் பழைய மாணவர் சங்க உறுப்பினர்களாகவும் அபிவிருத்தி சங்க உறுப்பினர்களாகவும் இருந்தால், கல்லூரிகளின் சைவசமயம் என்னுஞ் சொற்பதத்தை எந்தச் சிக்கலும் இல்லாமல் மீட்டெடுக்கலாம். இந்து மாமன்றம், இந்து சாதனம், இந்துச் சங்கம் என்றெல்லாம் இருப்பவை பொது அமைப்புக்களின் பெயர்களேயாகும். பொது அமைப்புக்களின் நிர்வாகக் கூட்டங்களில் எடுக்கப்படக்கூடிய ஒரு தீர்மானத்தினூடாக இவற்றையெல்லாம் சீர்செய்யலாம். தமிழ் அரசியல்வாதிகள் பாராளுமன்றத்தில் தமிழர் பண்பாட்டு மீட்சியைச் சிந்தித்து, பாராளுமன்றத்தில் இச்சிக்கலினை விளங்கப்படுத்தி, அரசாங்கத்திற்கு விண்ணப்பித்தால், சைவசமய கலாசார அலுவல்கள் திணைக்களம் என்னும் பெயரும் சாத்தியமே! யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் சைவசமயக் கற்கைகள் பீடம் என்னும் பெயர் மாற்றமும் இடியப்பச் சிக்கலான ஒன்றல்ல! ஒரு இனம் உயர வேண்டுமானால், இனத்தின் மரபான அடையாளத்தில் அக்கறையுடையவர்கள் அந்த இனத்திற்குரிய தலைவர்களாக விளங்கினாற் போதுமானதாகும். சமூக அமைப்புக்களிலும் அரசியலிலும் உள்ளோர் இந்த நேர்மையோடு விளங்கினால், நம் இனம் பீடு பெறும் என்பது உறுதி! எல்லாம் திருவருட் சம்மதம்.

**இக்காலத்தில் இறந்துபோன பல மானிடர்களையும் ஞானிகள் பாபாக்கள் என்றெல்லாம் பெயர் வைத்து கோயில் திருக்குடமுழுக்கு ஓமம் திருத்தேருலா என்றெல்லாம் உழல்கின்றார்களே இதனை ஏற்கலாமா?**

வீட்டிலே ஏராளமான விளையாட்டுப் பொருட்கள் இருக்கும். ஆனால், குழந்தையோடு கடைக்குச் செல்லும் போது வீட்டிலே உள்ள விளையாட்டுப் பொருள் போன்றே விளங்கும் ஒன்றைக் குழந்தை வேண்டும் என்று கேட்கும். **“இப்பொருள் நம் வீட்டில் உள்ளதே?”** என்றால், **“எனக்கு இதுதான் வேண்டும்”** என்று கூறும். ஏனெனில், வீட்டில் நித்தமும் கண்டு களித்த பொருள்பால் குழந்தை ஈடுபாடு குறைந்து, புதியபொருளில் நாட்டம் கொள்வதே இதற்குக் காரணமாகும். மனம் என்பது நம்பால் உள்ள சிறப்புக்களை உணராது, அச்சிறப்புக்களின் பெறுமதி விளங்காது, வெளியில் இருந்துவரும் ஒன்றின்பால் நாட்டம் கொள்வது வழக்கு. ஆனால், இவ்வழக்கு உலகியல் வழக்காக இருக்கும்வரை அவ்வழக்கில் உலகார் உழன்று பக்குவம் பெறுதலே வாழ்வு என்று கடக்கலாம். ஆனால், இவ்வழக்கு இன்று தமிழரின் சமய வாழ்வியலிலும் புகுந்து பெரும் குழப்பங்களையே உண்டாக்கியவாறுள்ளது.

உலகியல் வழக்கு என்பது நன்றாக அறம் பொருள் இன்பத்தில் திளைத்து பக்குவப்படவேயாகும். இந்த அறம் பொருள் இன்பம் என்னும் மூன்றுக்கும் அறமே ஆதாரம். வீட்டின் பத்திற்கும் அதுவே ஆதாரம். இக்காலத்தில் பெருகுபவை யாவும் அறத்தைத் தொலைத்த பொருள், அறத்தைத் தொலைத்த இன்பம், அறத்தைத் தொலைத்த வீடு என்பதேயாகும். இவற்றால் எப்பயனும் இல்லை.

சமயம் என்பது ஒருவரை நன்றாக நல்வழியில் சமைத்தெடுப்பதாக இருத்தல் வேண்டும். எனவே, உலகியல் வழக்குகள் சமயநெறியைக் குழப்பாது சமயம் நன்னெறியில் பேணப்படும்வரையிலுமே, உலகியல் வழக்குகளால் உழலும் உயிர்களுக்கு சமயம் பக்குவத்தைக் கொடுத்து அவ்வழக்குகளில் இருந்து உயிர்கள் உயர்வதற்கு வழிகாட்டும். உலகியல் வழக்காகவே சமயமும் உருமாறிவிட்டால், உயிர்கள் கடைந்தேறுவதற்கு எங்ஙனம் நன்னெறி துலங்கும்? இதனாலேயே, நாயன்மார்களும் சந்தானகுரவர்களும் அருளாளர்களும் சைவசமயத்தை வரம்போடு பேணும் அருள்வழியை அருளிச்செய்தார்கள். காலங்காலமாய்த் தோன்றிய அருளாளர் யாவரும் சைவசமய அருள்வரம்புக்கு எந்தவொரு குந்தகமும் ஏற்படாமல் நன்றே பேணினார்கள். சிவயோகர்சுவாமிகள் யாழ்ப்பாணத் திருமண்ணில் தோன்றி, தமிழர்களையெல்லாம் நன்னெறியில் வழிப்படுத்திய அருளாளர். சிவபதம் எய்தும் சமயம், தன்னைவைத்து கோயில் வியாபாரங்கள் பெருகிவிடக்கூடாதென்று மிகத் திடமாகச் சிந்தித்து, தன்னுடலை எரித்துவிடும்படி ஆணையிட்டார்கள். யாழ்ப்பாணம் மட்டக்களப்பு சிவதொண்டன் நிலையங்களும் கொழும்பில் அவர் பத்தர் ஏற்படுத்திய சிவயோகர் சுவாமிகள் வழிபாட்டு நிலையமும் சைவசமய நெறி பிறழாது திருமுறைகள் போற்றி இயங்கிவருதல் கண்கூடு. சிவயோகர் சுவாமிகளை அருளாளர் என்னும் நிலைகடக்காது பேணி, கடவுளாக்காது அருளாளராகவே கொள்ளும் வழிபாட்டு மரபு தமிழர் பண்பாகவுள்ளது. ஏனெனில், **“பிறவா யாக்கைப் பெரியோன்”** என்று சிலப்பதிகாரமே கொண்டாடும் அளவுக்கு, கடவுள் இலக்கணத்தை சிவபெருமானிற் கண்டு இன்புற்று வழிபடும் இனம் எம் இனம்.

திருஞானசம்பந்தர்பெருமான், திருநாவுக்கரசு நாயனார், சுந்தரமூர்த்தி நாயனார், மாணிக்கவாசக சுவாமிகள் முதலிய நாயன்மார் யாவரும் பிறவா முத்தி பெற்றவர்கள். அவர்களுக்கு உலக நோக்கு அறவேயிருக்காது. சிவமாகிச் சிவானந்தம் அனுபவித்துக் கொண்டிருக்கும் உயிர்வர்க்கத்தர். சிவமாகி நிற்பதனால் அவர்களுக்குச் செய்யும் பூசை சிவபூசையேயாகும். எனினும், உலகியல் நோக்கு அவர்கட்கு இல்லையாதலால், அப்பூசையை திருஞானசம்பந்தப் பெருமான் முதலிய நாயன்மார் வடிவில் நின்று ஏற்பதும் சிவபெருமானேயாகும். ஆனால், இக்காலத்தில் இலங்கையில் புகுத்தப்படும் மானிட ஆசாமிகள் யாவரும் வாழ்ந்து ஒருசில மாயாஜாலங்கள் செய்து மடிந்தோரேயாகும். இவர்களின் மாயாஜாலங்களுக்கு எந்தவொரு நம்பகச் சான்றும் இல்லை. இவர்கள் தம் வாழ்வில் சிவநாமம் செப்பியதாகச் சான்றெதுவும் இல்லை. இவர்கள் பேசியதாகக் கூறப்படுபவையெல்லாம் ‘‘நானே கடவுள்’’ என்னும் ஏகான்மவாதக் கொள்கைகளேயாகும். இதனாலேயே, சங்கராசாரிய சுமார்த்த மதத்தவர் இந்துவென்ற பெயரில் இவ்வழிபாடுகளையெல்லாம் தமிழரிடம் வளர்த்தவாறுள்ளனர்.

(தொடரும்)

திருச்சிற்றம்பலம்

# சிவபூமியில் சிவனைத் தேடி

## கி.மு 3ஆம் ஆண்டு வரலாற்றுடன் தொடர்புடைய மட்டக்களப்பு வேலோடும் மலை சிவன் கோயில்



சைவப்புலவர்
சுந்தரமூர்த்தி துஷ்யந்த்
கலைமாணி முதுகலைமாணி, பிரான்சு



**(சென்ற இதழ்த் தொடர்ச்சி)**

### வேலோடும் மலையில் வேல் வழிபாடு

வடக்கே வெருகலாறு தொடக்கம் தெற்கே கூமுனை ஆறுவரை பண்டைய காலத்தில் கிழக்கிலங்கையில் மட்டக்களப்பு தேசம் நீண்ட எல்லையைக் கொண்டு பரந்த தேசமாக விளங்கியது. அவ் எல்லைப் பிரதேசங்களுள் தேசத்துக் கோயில், திருப்படைக் கோயில்கள் என்ற தேசத்து மரபுகளும், திருப் படை மரபுகளும் செல்வாக்குப் பெற்றிருந்த சூழலில் கொக்கட்டிச் சோலைச் சிவன் கோயிலைத் தவிர ஏனையவை கருவறையில் வேலைபடையாயுதமாகக் கொண்டு போற்றப்பட்ட கோயில்களே மண்டூர், கோயிற்போரதீவு, சித்தாண்டி, வெருகல், திருக்கோயில் ஆகிய பதிகளிலே சிறப்புற்று விளங்கியுள்ளன.

மட்டக்களப்பின் காடுகள், மலைகள் மற்றும் கடலை, ஆறுகளை அண்டிய பகுதிகளில் பழங்குடிகளான வேடர்கள் வாழ்ந்துள்ளனர். இவர்கள் தங்களுக்குத் தேவையையும் பாது காப்பையும் வழங்கக் கூடிய வேல், ஈட்டி, வில், அம்பு போன்ற கருவிகளை பூசித்தும் வந்துள்ளனர். இவ்வாறான வேடர்கள் வாழ்ந்த பகுதிகளாகவே மண்டூர், சித்தாண்டி, வெருகல் போன்றவை விளங்கியுள்ளன. அங்கு வேடர்கள் பூசித்த வேல்வழிபாடு இன்றளவும் தொடர்கின்றமையை அவதானிக்க முடிகின்றது. மேலும் கதிரவெளி, களுவன் கேணி, ஜெயந்திபுரம், பால்ச்சேனை, கிரான், வாகரை, நாசிவன்தீவு, வேலோடும் மலை போன்ற பல இடங்களில் குமாரத்தன் வழிபாடு வேட்டுவ மக்களின் பண்பாட்டையும் வழிபாட்டையும் பிரதிபலிக்கும் வகையில் இடம் பெற்று வருகின்றமையும் நோக்க முடிகின்றது. அங்கும் வழிபாட்டின் மூலப் பொருளாக வேலாயுதமே இடம் பிடித்துள்ளது. வழிபாடுகள் ஆகமம் சாரா முறையில் தெய்வாதிகளான கப்புகனார் எனும் பூசாரியினால் மந்திரப்பாவனையின்றி மன்றாட்டம், தெய்வமேறி ஆடுதல், படையல் என்ற வகையில் ஆடிப் பாடி நிகழ்த்தப்படுகின்றது.

வேலோடும் மலையில் நாகர் இருப்பிற்குப் பின்பு அங்கு வாழ்ந்த வேட மக்களால் கொத்துப் பந்தலிட்டுப் பூசிக்கப் பட்ட இடம் வேலோடும் மலையாக விளங்குகின்றது. மலை முகட்டின் நாகரின் இராசதானி இருப்பிடத்தின் சிதைவுகளின் மேல் வேல் கோயில் அமைந்துள்ளது. இங்கு வாய் கட்டிப் பூசை புரியும் பூசகர்களே வழிபாடுகளை முன் நின்று நிகழ்த்துகின்றனர். இக் கோயிலின் வடக்குப் பகுதியில் குமாரத்தன் கோயிலும் இடப்பக்கத்தில் இரும்பு வேல் ஒன்று நடப்பட்டு அதன் அருகாமையில் வற்றாத சிறு சுணையும் அமைந்துள்ளது. இவ்விடம் சித்தர்களின் வசிப்பிடம் என்றும் பலர் கூறுகின்றனர். அவர்களின் கூற்றுக்கமைய இக்கோயிலின் பின்புறத்தில் பதினெண்சித்தர்களின் சிலைகளும் காணப்படுகின்றன. இவ் அடர்ந்த காட்டினுள் துறவிகளும் நடமாடுகின்றனர். அவர்கள் இத்தலத்திலேயே அண்டி வசிப்பதையும் காணக்கூடியதாக



உள்ளது. இவ்வாறு நாகரின் இருப்பிடங்களும், இராசதானிகளும் அமைந்துள்ள பல இடங்களில் நாகவழிபாடும், வேல்வழிபாடும் ஈழத்தின் பல பாகங்களிலும் இருந்துள்ளமையை அங்கு கிடைத்துள்ள தொல்பொருட் சின்னங்களை ஆதாரமாகக் கொண்டு அறிய முடிகின்றது. அந்த வகையில் வேலோடும் மலையில் அமைந்துள்ள வேல் வழிபாடு நாகர் இனத்தின் எச்சமாகவும் வேட இனத்தவர்களின்

குலதெய்வ வணக்க முறையாகவும் இருந்துள்ளமையை உணர முடிகின்றது.

### வேலோடும் மலையில் நாக வழிபாடு

நாகம் தெய்வாம்சமானது என்பது நாகர் இனத்தின் நம்பிக்கை ஆகும். எனவே ஆதியில் நாகத்தை நாகர் மணிணாகன் என்று பெயரிட்டனர். இவ்வாறு மணிணாகன் உறையும் இடங்களை மணிணாகன் பள்ளி என்று குறிப்பிட்டனர். அவ் இடங்களில் நாகரின் வடிவங்களைக் கல்லில் புடைப்புச் சிற்பமாகச் செதுக்கி காவற் தெய்வமாகப் போற்றினர். மேலும் ஐந்து தலையுடைய நாகத்தின் சிற்பம் அவர்களால் பெரிதும் வணங்கப்பட்டு வந்துள்ளது. நாகர் வடிவம் பொருந்திய கற்களில், தூண்களில், பாறைகளில் மணிணாகன் என்ற பெயர் பிராமி எழுத்தில் பொறிக்கப்பட்டிருக்கும். இது நாகரின் இருப்பிடங்கள் அமைந்த இடங்களில் கவனிக்கக்





கூடியதாக இருக்கும். மட்டக்களப்பு தேசத்தில் இத்தகைய தடையங்களை பல ஆய்வாளர்கள் கண்டுபிடித்துள்ளனர். கண்டுபிடித்துக் கொண்டும் வருகின்றனர்.

இந்த அடிப்படையில் வேலோடும் மலையிலும் அதனை அண்டிய நாகர் மலையிலும் நாகராசன் வழிபாடு இடம்பெற்றிருக்கின்றது. வேலோடிய மலையில் நாகரின் இராச்சியம் அமைந்திருந்தமைக்கான தொல்பொருள் சின்னங்கள் சரிந்து ஆங்காங்கு சிதறுண்டு காணப்படுகின்றன. இவ் இராச்சியம் சீராக இருந்த காலத்தில் அங்கு நாகர் போற்றிய மணிணாகன் பள்ளி இருந்துள்ளது. தற்போது மலையில் அமைந்துள்ள வேல் கோயிலின் வலது பக்க மூலையில் மூன்று கறுப்பு நிறமான கற்கள் நட்டுவைக்கப்பட்டுள்ளன. அவை பரிபாரர், நாகராசன், குலதெய்வம் என்று பெயரிடப்பட்டுள்ளது. இம் மூன்று கற்களும் மணிணாகனாக நாகர்களால் காவல் தெய்வமாகப் போற்றப்பட்டவை என்பது புலனாகும். இவை அக்கால அரண்மனையில் வாசல் படிகளில் காவல் தெய்வமாக நிறுவிப் போற்றப்பட்டு வந்திருக்க வேண்டும். இதே போல் அம்பாறை மாவட்டத்தில் உள்ள சங்குமன்கண்டியில் அரண்மனை அமைந்த பகுதியின் வாசற்படியில் கருங்கல்லில் புடைப்புச் சிற்பமாக நாகவடிவம் அமைந்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

நாகர் மலையில் ஐந்து தலையுடைய நாகர் சிலையும் அதன் அருகில் நாகங்கள் கூடிவாழும் புற்றும் காணப்படுகின்றது. அம்மலையில் தேவநாகங்கள் உள்ளதாக இப்பிரதேசவாசிகள் கூறுகின்றனர். அவ் இடத்தில் இன்றும் மக்கள் தங்கள் பூசைகளைப் புரிந்து வருகின்றனர்.

### வேலோடும் மலையில் சிவ வழிபாடு

சிவனைப் பூசிப்பதற்குரிய அற்புத மலையாக வேலோடும் மலை விளங்குகின்றது. இம்மலையின் உச்சிப் பகுதியில் நின்று நோக்கும் போது மயில்தங்கிய மலை, குடும்பிமலை, குசலான மலைக் கோயில்கள் தென்படுகின்றன. இம்மலைகளில் ஆதி காலம் தொட்டு சிவ வழிபாடு நிலவியமைக்குரிய தொல்பொருட் சின்னங்களின் சிதைவுகள் காணப்படுகின்றது. குறிப்பாக குசலான மலை சிவ வழிபாட்டிற்குரிய இடம் என்பதற்கு அங்கு காணப்படும் ஆவுடையார் ஆசனக்கல்லும், சிதைந்த நிலையில் காணப்படும் சிவலிங்கப் பகுதியும் ஆதாரமாக விளங்குகின்ற இம்மலைக் கோயில் நாகர் காலத்தனவாகும். ஏறக்குறைய கி மு 03ம் நூற்றாண்டுக்குரியவை.

வேலோடும் மலையில் அமைந்துள்ள சிவன் கோயில் அண்மைக் காலத்தில் உருவாக்கப்பட்டது. இக்கோயில் அமைந்துள்ள இடத்தில் செங்கற்களும் ஓடுகளும் மலையில் உள்ள மண்ணிலும் தரைப்புற்களினாலும் மறைந்து கிடக்கின்றன. அவ்விடம் நாகரின் கோட்டம் ஒன்று அமைந்திருந்தமையை எமக்குப் புலப்படுத்துகின்றது. அதன் எச்சமாக ஆறு அடி உயரமான சிவலிங்கம் ஒன்றும், பெரிய நந்தியொன்றும் மேற்கே உள்ள குசலான மலையை நோக்கிய வண்ணம் அமைக்கப்பட்டுள்ளது. சிவலிங்கம் அமைந்துள்ள கோயில் நான்கு திசையில் நின்று தொழக்கூடிய வகையில் திறந்த வெளியாகக் காணப்படுகின்றது. கிழக்குவாசலில் வேடர் வழிபாட்டுப் பந்தலான காட்டு மரத்தடிகளைக் கொண்டு கொத்துப் பந்தலும் போடப்பட்டுள்ளது. இக் கோயிலின் அருகாமையில் அடியவர்கள் எந்நேரமும் வணங்குவதற்கும் நீராட்டி வழிபாடுகள் புரிவதற்கும் சிறியளவிலான ஐந்து சிவலிங்கங்களும் அமைக்கப்பட்டுள்ளன.

இங்கு வருடந்தோறும் மாசித் திங்களில் சைவர்களால் கடைப்பிடிக்கப்படும் சிவனிரவு மிகவும் சிறப்பாக நடைபெற்று வருகின்றது. காட்டு வழியாக சந்தணமடு ஆற்றைக் கடந்து ஆயிரக்கணக்கான பத்தர்கள் வருகை தந்து இவ்விரதத்தை இம் மலைக்கோயிலில் கடைப்பிடிப்பர். இரவு முழுவதும் அடியவர்கள் நெய்விளக்கேற்றி சிவனை வழிபடுவர். முதல் இரவு தொடங்கி இறுதிச் சாமம் வரை யாகபூசைகளும், தமிழில் திருவாசப் பாடல்களும் ஓதப்படும். விரத முடிவில் காலையில் அன்னதான நிகழ்வும் நடைபெறும். இந்நாளில் சித்தர் குரல் அமைப்பினால் உருத்திராக்க மாலை அணிவிக்கும் நிகழ்வும் இடம்பெறும்.

வேலோடிய மலை இலங்கையின் பூர்வீகக் குடிகளான நாகர்கள் வாழ்ந்த, அரசாட்சி புரிந்த வழிபாடுகள் இயற்றிய இருப்பிடமாகும். அதேபோல் மட்டக்களப்பு பிரதேசங்களில் பல பகுதிகளில் வாழ்ந்த வேடர்களின் வழிபாட்டிடமாகவும் சிறப்புப் பெற்றுள்ளது. இதனால் இம்மலையில் வேல் வழிபாடு, நாகவழிபாடு, சிவ வழிபாடு, குமரத்தன் வழிபாடு, பாதவழிபாடு என பல்வகைப்பட்ட வழிபாடுகள் பழமை நோக்கில் பின்பற்றப்பட்டு வரும் இடமாக விளங்குகின்றது.

**குறிப்பு : இம்மலைக் கோயிலின் களவாய்விற்கு என்னோடு பயணித்தவர்களான ஆசிரியர் தெ.தயமுகன், யோ.கஜேந்திரா, அடியவன் பிரவீன் ஆகியோர்களுக்கு எனது நன்றிகள் பல.**

**“சிவ சிவ என்றிட சிவகதி தானே”**

**(முற்றும்)**

**திருச்சிற்றம்பலம்**

# அடியார் பெருமையின் ஆவண ஊற்று - பெரிய புராணம்:

## ஞாலம் உய்ய எழுந்தருளும் நம்பி தம்பிரான்தோழர்




**“சுந்தரத் திருத்தொண்டத் தொகைத்தமிழ்**
**வந்து பாடிய வண்ண முரைசெய்வோம்”**

### தில்லை வணங்கித் திருவாரூரடைதல்

திருவெண்ணெய் நல்லூரிலே நம் நாயனார் திருவருள் பெற்ற பின்னர், அவர் திருநாவலூரையடைந்து அங்கு வீற்றிருக்குஞ் சிவபெருமானைப் பாடினர். பின்னர்த் திருத் துறையூருக்குச் சென்று திருப்பதிகம் பாடி இறைவனை மலர்கொண்டு போற்றினர். பிற பல தலங்களையும் பணிந்து தில்லைக் கூத்தரை வழிபடுங் கருத்துடன் சிதம்பரத்திற் குப் புறப்பட்டார். சந்தனமும், அகிலும், மயிற்பீலிகளும் மலர்களும் மணிகளும் வீசிவரும் பெண்ணை யாற்றினைக் கடந்து நம் நாயனார் திருவதிகையடைந்து திருநாவுக்கரசர் திருத்தொண்டியற்றிய அத்திருப்பதியை மிதித்துச் செல்வ தற்கு அஞ்சிச் சித்தவடம் என்னுமிடத்திலுள்ள மடத்திலே தங்கி அடியவர் கூட்டத்துடன் துயில் கொள்ளலாயினர். அப்பொழுது திருவீரட்டானப் பெருமானார் ஒரு முதிய மறையவர் வடிவோடு மடத்திற் புகுந்து, அவர் முடி மீது தம் திருவடித்தாமரைகளை வைத்துப் பள்ளிகொள்வாராயினர்.

திருநாவலூரரர் அதையுணர்ந்து அங்ஙனம் பள்ளிகொண்ட வரை நோக்கித் தம்முடைய தலைமேல் அவருடைய காலினை வைத்தது எதனாலென்று வினவ, மறையவர் என்னுடைய மூப்பினாலே திசையறியாது அங்ஙனம் செய்துவிட்டேன் என்றனர். நாயனார் அதனை ஒப்புக்கொண்டு வேறோரிடத்திற் சென்று துயின்றனர். அங்கே யும் அம்மறையவர் தம் திருவடி களை நீட்டியருள “இங்கேயும் வந்து பல கான் மிதிக்கிற நீர் யார்?” என்று உசாவியவுடன் நீ என்னையறியாயோ’ வென்று சொல்லி அவர் மறைந்தருளினார். அப்போது திடுக்கிட்டு என் செய்தேனெனக் கழிவிரக்கமுற்று நம்நாயனார் **“தம்மானை யறியாத சாதியாருளரே”** என்னுந் திருப்பதிகம் பாடித் திருவதிகை முதல்வரைப் பணிந்தனர்.

**“தம்மானை யறியாத சாதியா ருளரே**
**சடைமேற்கொள் பிறையானை விடைமேற்கொள் விகிர்தன்**
**கைம்மாவி னுரியானைக் கரிகாட்டி லாட**
**லுடையானை விடையானைக் கறைக்கொண்ட கண்டத்**

தெம்மான்ற னடிக்கொண்டென் முடிமேல்வைத் திடுமென்னு
மாசையால் வாழ்கின்ற வறிவிலா நாயே
னெம்மானை யெறிகெடில வடவீரட் டானத்
துறைவானை யிறைபோது மிகழ்வன்போ லியானே”

பொன்னும் மணியும் யானைமருப்பும் ஒள்ளிய முத்தும் நறுமலருமாகியவற்றை அலை யென்னுங் கைகளாற் கொண்டு வந்திட்டுத் திருவதிகைப் பெருமானை வழிபாடு செய்யுந் திருக் பின்னர் நம் நாயனார் குறளுருவாய் மூவடி மண்ணளந்த வாமனர் வழிபட்ட திருமாணி குழியைச் சேர்ந்தார். அத் கெடில நதியிற் படிந்து திருவீரட்டான முதல்வரை வணங்கிய திருப்பதியிலுறையு மாணிக்க வரதரை வணங்கித் திருத்தினை நகரைப் பணிந்து பாடி யாழும் முழவும் மந்திரமும் அரம்பையர் இன்னிசையும் நீங்காத தில்லை நகர்ப்புறத் தடைந்தார்.

கயல் மீன்கள் பாய்ந்து செந்தாமரை மலர்களை யசைக்கும் பள்ளொலி மிக்க வாவிகளும், மலங்குமீன்கள் திரியும் வளம் பொருந்திய வயல்களுஞ் சூழ்ந்ததாய்த், தொழுவார்களின் எல்லையை வணங்கிப் புன்னை, மா, மகிழ், சிவதை, தென்னை, மும்மலங்களையுங் கெடுத்து வீடு நல்குந் தில்லைப் பதியின் இலவங்கம், நாரத்தை, கமுகு, குங்குமம், வாழை, இலுப்பை, வஞ்சி முதலிய பல மரங்கள் எங்கும் நெருங்கிய முகிற் கூட்டங்கள் தங்குஞ் சோலைகளை உடையதாய்க் குயில்கள் மிடைந்து கூவுவதாய் விண்ணவர் நாட்டிலுஞ் சிறந்து விளங்குந் தில்லையின் புறத்துள்ள மருத நிலங்களைக் கடந்து அந்நகர் மருங்கு சென்றார்.

வன்னி, கொன்றை, சுரபுன்னை, சண்பகம், சந்தனம், பலாசு, செருந்தி, மந்தாரம், கோங்கு, குரவு, புன்னை பாதிரி, கூவிள முதலிய மரங்களும் சிறுசண்பகம், முல்லை, மல்லிகை, நந்தியாவர்த்தம், அலரி முதலிய பன்மலர்களும் பொருந்திப் புனிதம் பெற்ற நந்தவனங்களை இறைவன் வடிவாக வணங்கிச் சென்றார். உமையம்மை காணவும் ஏழுலக முய்யவுந் திருநடன மியற்றும் இறைவர் திருக்கூத்தினைக் காண்பான் மேகமண்டல மளாவிய தில்லை மதிலைக் கடல் சூழ்வது போலச் சூழ்ந்துகிடந்த அகழியை நம் நாயனார் கண்டு மகிழ்வடைந்தார். அவ்வகழியிற் படர்ந்த தாமரையிலுள்ள வண்டுகள் அதன் கரையிலுள்ள தாழம்பூவின் வெண்தாதினிற் படிந்து தூய வெண்ணீ றணிந்த அடியார்கள் போன்று முரல்வதைக் கண்டு நம்பியாரூரர் மிகுந்த அன்போடு சென்றனர். நான்மறையொலியுங் கொடிமணி யொலியும் நாற்றிசையிலும் வெளிருதற் கேதுவாய் அயனின் நான்கு முகங்கள் போல விளங்குந் தில்லையின் நான்கு திருவாயில் களுள், வடக்கு வாயிலின்முன் சென்று நம்பியாரூரர் தம்மை எதிர்கொள்வதற்கு அடியார்களோ, தாமோ முன் வணங்கினாரென்றறிய முடியாதபடி வணங்கி மகிழ்ந்து கூத்தப் பிரானைக் காணும் பேரவாவுடன் அழகிய திருமாளிகைகள் விளங்குந் திருவீதியுட் புகுந்தார்.

பல்வகை இன்னிசைகளும் நிறைந்த வீதியின்கண், உயர்ந்த திருமாளிகைகளிடத்துக் கட்டப்பட்ட வெண்கொடிகள் ஓமப் புகையாலாகிய முகில்களின் நடுவே மின்னிய மின்னல் போலத் தோன்றி மிளிர்ந்தன. எல்லா உலகத்திலுள்ள அழகும் தில்லைப் பதியில் வந்துற்றனவென்று சொல்லும்படி பல்வகை வளங்களும் மிகுந்திலங்கிய தேரோடுந் திருவீதியை நம்பியாரூரர் வணங்கினர். தேவர் கூட்டம் நெருங்கித் திருநந்தி தேவரால் ஒழுங்குபடுத்தப்பட்டுத் திருக்கூத்துக் காண்பான் அமயம் பார்த்தொரு புறம் நிற்ப பேரன்பர்களுங் கணநாதர்களுந் தடையின்றிச் செல்லும் மாண்புமிக்க திருக்கோயில் வாயிலைத் தாழ்ந்திறைஞ்சிச் சென்னியிற் குவிந்த செங்கைகளோடு நம் நாயனார் திருக்கோயிலுட் சென்றனர்.

பெருமதில் சூழ்ந்த பேரம்பலமாகிய மேருவை வணங்கி வலம் கடையிலும், வந்து மறைகளின் முதலிலும் இடையிலுங் அடியார்களது உள்ளக்கமலத்திலும் வெளிப்பட்டுத் தோன்றிச் சீர்வளரும் ஒளிமிக்க திருச்சிற்றம்பலத்தின் கண்ணே அணுக்கன் றிருவாயிலை யடைந்து திருக்களிற்றுப்படியின் பாங்கர்ச் சென்று, மண்ணவர் வண்ணம், மகிழ, மறைச் மாலயனறியா சிலம்பொலிப்ப, மன்றுளாடும் பெருமானைத் திருநாவலூரரர் கண்டார். கண்டு, தமது கண்ணுங் கையுங் கரணமும் ஒருவழிச் செல்லத் தாழ்ந்திறைஞ்சி ஐம்புல உணர்ச்சியையுங் கட்புலனே கொண்டு மேற்பட, அந்தக் கரணங்கள் நான்குஞ் சிந்தை என்னும் ஒரு கரணத்திலே யடங்கி நிற்க முக்குணங்களினும் முதனின்ற நற்குணமே தலைப்படப் பிறைசூடிய பெருமானது அளவில்லாத ஒப்பற்ற திருக்கூத்தினால் விளையப் பேரின்பக் கடலுள் திளைத்து. நீங்காத பெருங்களிப்பால் திருமேனி தளிர்க்கப் பெற்றார். கூத்தபிரானது திருநடனங் காண்பான் தமக்கு இந்நிலவுலகத்திற் கிடைத்த மனிதப் பிறவியே மேலான இன்பமாமென்று கருதி நம் நாயனார் சண்ணருவி பொழிந்து கைம்மலருச்சி மேற் குவித்து இசைநிறைந்த திருப்பதிகம் பாடிப் பரவிப் பணிந்தார்.

“ஐந்துபே ரறிவுங் கண்களே கொள்ள
வளப்பருங் கரணங்க ணான்குஞ்
சிந்தையே யாகக் குணமொரு மூன்றுந்
திருந்துசாத் துவிகமே யாக
இந்துவாழ் சடையா னாடுமா னந்த
வெல்லையி றனிப்பெருங் கூத்தின்
வந்தபே ரின்ப வெள்ளத்துட் டிளைத்து
மாறிலா மகிழ்ச்சியின் மலர்ந்தார்”

“தெண்ணிலா மலர்ந்த வேணியா யுன்றன்
திருநடங் கும்பிடப் பெற்று
மண்ணிலே வந்த பிறவியே யெனக்கு
வாலிதா மின்பமா மென்று
கண்ணிலா னந்த வருவிநீர் சொரியக்
கைம்மல ருச்சிமேற் குவித்துப்
பண்ணினா னீடி யறிவரும் பதிகம்
பாடினார் பரவினார் பணிந்தார்.”

தாண்டவ முதல்வரை வணங்கி நின்றகாலை அவருடைய திருவருளால், “காவிரிபாயும் வயல் புடைசூழ்ந்த திருவாரூர்க்கு வருக” என்ற ஒரு வான்நிழல் மொழியை நம்பியாரூரர் செவிமடுத்தனர். உடனே அவர் திருவாரூர்க்குச் செல்ல விருப்பங் கொண்டு திருவம்பலத்தை வலம் வந்து வெளிப்போந்து எழுநிலைக் கோபுரத்தை வணங்கி, ஆவண வீதி வழியே போய்த் தெற்கு வாயிலைக் கடந்து கொள்ளிடமென்னுந் திருநதிக்கு அப்பாற் சென்றனர்.

திருச்சிற்றம்பலம்

திருமலைச் சருக்கம் - (224 - 254)

சிவத்திரு. தென்னாடு நிலவன்
படம்-தேவராஜன் நடராஜன் அவர்களின் முகநூலில் இருந்து

# திருவாசகத் தெளிவு -
# இணையார் திருவடி



சிவபெருமான் ஆதியும் அந்தமும் இல்லாத அளவில் நீளும் சோதி வடிவினன். தேவர்களாகிய நான்முகனும், திருமாலும் கூட அறிய முடியாத எல்லையற்ற அருள் வடிவானவன். எனினும் அவன் அடியார்களின் மனதுள் ஒடுங்கி நிற்கின்றான். தூய அன்போடு தொண்டு செய்யும் அடியவர்களுக்காக, மால் அறியாத மலர்ப்பாதம் புவியில் பட நடந்து வரும் பெருங் கருணையாளன். மாணிக்கவாசகருக்காக இறைவன் குருந்த மர நிழலில் காத்திருந்தான். மனித உருவில் குருவாகி வந்த இறைவன் திருப்பெருந்துறையில் தன் திருவடிகளை மாணிக்க வாசகரின் தலையில் வைத்து தீக்கை வழங்கியருளினான்.

திருவடிகள் எனில் கண்கள் எனும் பொருளிலும் கொள்ள லாம். எனினும் தன் தலைமீது இறைவன் தன் சேவடிகளைப் பதித்தான் என்பதை **“சென்னிப் பத்து”** பகுதியில் மாணிக்க வாசகர் வியந்து உருகிப் பாடுகின்றார். ஆணவ மலம் முற்றும் நீங்க முயல்கின்ற அடியவர்களுக்கு இப்பேறு தானாய்க் கிட்டும்.

திருநல்லூரில் திருநாவுக்கரசு நாயனார் திருவடி தீக்கை பெற்றார். இதனை

**“நனைந்தனைய திருவடியென் தலைமேல் வைத்தார் நல்லூர் எம் பெருமானார் நல்ல வாறே” என்கின்றார்.**

சுந்தர மூர்த்தி சுவாமிகள், சித்தவடம் எனும் இடத்தில் திருவடி தீக்கை பெற்றார். இதனை,

**“தம்மான் தன் அடிக்கொண்டென் முடிமேல்,**
**வைத்திடுமென்றும் ஆசையால் வாழ்கின்ற அறிவிலா நாயேன்”**
**என்கின்றார்.**

இங்கு வியப்பு என்னவெனில், திருமால் தேடியும் அறியாத திருவடிகள், அடியாரைத் தாமாகத் தேடிவந்தல்லவா தீண்டியது! பெருமானாரின் திருவிளையாடல்கள் எம் சிந்தனைக்கு சொல்லும் செய்தி ஒன்று தான்! அது, பத்தி வலையில் தாமாக வந்து படும் மீனாக இறைவன் உள்ளான் என்பதேயாகும். எனவே அலைந்து தேடுவதை விடுத்து அகத்துள் அன்புப் பயிபர் வளர்த்தால் அது உண்ண இறைவன் இதயத்துள் நுழைவான். அன்பே சிவம், சிவமே அன்பு எனும் நம் தத்துவ விளக்கம் உணர்ந்தாலன்றி இறைவன் திருவடி காண்பது அரிதினும் அரிதேயாகும்.

**“திருவடி வைத்தென் சிரத்தருள் நோக்கிப்**
**பெருவடி வைத்தந்த பேர் நந்தி தன்னைக்**
**குரு வடிவிற் கண்ட கோனை எங்கோலைக்**
**கருவடி யற்றிடக் கண்டுகொண்டேனே”**

என்று தான் திருவடி தீக்கை பெற்றமையை சொல்கின்றார் திருமூலர். எனவே மாணிக்கவாசர் முதல் திருமூலர் வரை மனிதப் பிறவியில் இருந்தே திருவடி கண்டு தெளிந்த ஞானம் பெற்றவர்களை நாம் எம் மனத்தில் வைத்து வணங்குவதே நம் கன்ம வினைகள் ஒழிந்து, மலநீக்கம் பெற உதவும் என்பதை நாம் உணர வேண்டும்.

இராவணன் இறைவன் திருவடிகளை கண்டான். இசை பாடி நிலைபெற்றான். அது அவனை அழுத்தி வருந்தினாலும் அவன் மாயை கெடும்படி அருளியது இறைவன் கருணையே! எனவே, எம்மை சுமைகள் அழுத்துகின்றனவே என்பதற்காக இறை வழிபாட்டைக் கைவிடக் கூடாது. அதுவே இறைவன் திருவடி காணும் உபாயமாகவும் அமையலாம்.

**திருவடி ஞானம் சிவமாக்கு விக்கும்**
**திருவடி ஞானம் சிவலோகம் சேர்க்கும்**
**திருவடி ஞானம் சிறை மலம் நீக்கும்**
**திருவடி ஞானமே திண் சித்தி முத்தியே - திருமந்திரம்**

**திருச்சிற்றம்பலம்**


**சிவத்திரு. சிவ செந்தமிழாதன்**
**இளம்புலவர் - தென்னாடு**
**(முதுமாணி - சைவசித்தாந்தம்)**



# தென்னாடு

செந்தமிழாகம சிவமடம். கொக்குவில், யாழ்ப்பாணம்.  www.thennadu.org

**சிவத்திரு. சிவ. செந்தமிழாதன், இளம்புலவர் - தென்னாடு,**
**செந்தமிழ் ஆகம சிவமடம் – கொக்குவில்.**
+94 (77) 575 2551 / aathan@thennadu.org



## சைவப் பேரொளி எங்கும் நிறைக!

கடந்த மார்கழித் திங்கள் 10 ஆம் (டிச 25) நாள் தென்னாடு செந்தமிழ் ஆகம சிவமடத்து சைவ மாணவர் சபை பெரும் முனைப்போடும் எழுச்சியோடும் கொண்டாடிய மார்கழிப் பெருவிழா இந்த மண்ணில் சைவத்தின் மீளெழுச்சியை வெளிக் காட்டியது!

யாழ்ப்பாண நகர வீதிகளில் யானைகளில் திருமுறைகளையும் திருநெறிகளாகிய சித்தாந்த சாத்திர நூல்களையும் ஊர்வலமாக எடுத்து வந்தமை எல்லோரது கவனத்தையும் ஈர்த்தது!

இந்த மண்ணில் வாழ்கின்ற இளைய பிள்ளைகள் சைவ சமயம் மீதான தமது கவனத்தை கூர்மையாக்கவும், இந்த மண் சைவத்துக்கும் தமிழுக்கும் என்றென்றும் முன்னுரிமை கொடுக்கின்றவர்களைக் கொண்டது என்பதை மீண்டும் மீண்டும் இவ்வுலகத்திற்கு எடுத்துக்காட்டவும் தென்னாடு செந்தமிழ் ஆகம சிவமடத்து சைவ மாணவர் சபை முன்னெடுத்த இம்முயற்சி அதன் முழு பலனையும் பெற்றிருந்தது.

கிறித்துவ மதத்தின் தேவகுமாரனாகிய கிறித்து பிறந்த நாளாகக் கருதப்படும் டிசம்பர் இருபத்தைந்தாம் நாள் மார்கழிப் பெருவிழா கொண்டாடப்படுவதை நம்மில் சிலரும் விமர்சித்து இருந்தனர். நாம் பிற மதங்களுக்கும், அவர்கள் நம்பிக்கைகளுக்கும் எதிரானவர்கள் இல்லை. எனினும் தத்துவ அடிப்படையில் சைவத்தின் மீது பற்றுறுதியாய் இருப்பவர்கள். அதேவேளை சமயத்தட மாற்றங்களுக்கும், திட்டமிட்ட மதமாற்றங்களுக்குமே எதிரானவர்கள். திட்டமிட்ட மதமாற்றங்களும் ஆக்கிரமிப்புக்களும் இங்கு நிகழும் போது அமைதிகாக்கும் போலிச்சைவர்கள், இப்படி ஒரு நாள் தெரிவுக்காக விமர்சிப்பது நகைப்புக்குரியது. கால ஆராய்ச்சியில் சைவசமயத்தவர்கள் கொண்டாடும் மார்கழியின் பெருமையும், பின் வந்த மதங்களின் நடைமுறைகளும் துலங்கும்.

சீர்வளர்சீர் ஆறுமுகநாவலர்பெருமானும் நீர்வேலி சிவசங்கரபண்டிதரும் நேரடியாகவே பிறமதங்களைக் கண்டனம் செய்தார்கள் அவற்றின் தத்துவ குறைகளைச் சுட்டிக்காட்டி சைவர்கள் அம் மதங்களின்பால் சேர்ந்தால் உண்டாகும் முத்தியற்று உழலும் நிலை பற்றியும் அறிவுறுத்தினார்கள். அதனைப் பிரசுரங்களாகவே வெளியிட்டார்கள். அவர்கள் வழிவழியாக வந்த நாம் அந்த அளவில் இல்லையேனும், நம் சமயப் பெருமைகளை காலம் நேரம் பொழுது கருதாமல் ஓங்கி உரைப்பதுவே பெருங்கடமையாகும்! சமய அடக்குமுறையின் உச்சம் இருந்த காலத்திலேயே தம் நலன் கருதாது எம் முன்னவர்கள் செய்த பணியால் தான் நாம் இன்றும் சைவர்களாக உள்ளோம் என்பதையுணர்க!

சைவசமயம் சார்பாக எழுச்சிகண்டுள்ள இக் காலம் நம் சமய தத்துவங்கள் மீது இளையவர்கள் தம் கவனத்தை திருப்புகின்ற காலம்! ஆய்வு நோக்கில் நம் சித்தாந்த நூல்கள் அணுகப்படுகின்ற காலம்! பேரறிஞர்களும் சித்தாந்த சாத்திரப் புலமை வாய்ந்த தமிழகத்து சைவ மூதறிஞர்களும் இங்கே வந்து ஈழத்து சைவத்தமிழ் பெரியவர்களுடன் சங்கமிக்கும் ஒரு மகத்தான காலம்! எனவே இதனை நாம் எல்லோரும் ஒரு நல்ல வாய்ப்பாக பயன்படுத்தி எதிர்கால சைவ சமய எழுச்சிக்கு எம்மால் இயன்ற ஒரு சிறு பங்களிப்பையேனும் நல்க வேண்டும்!

மாறாகத் தேவையற்ற விமர்சனங்களை முன் வைப்பது காலம் கடத்துவது தகாத செயலே!

பெரும் முயற்சியோடும் அளவில் பெரிய பொருள் செலவோடும், அருள் பெருக்குக்காக தென்னாடு செந்தமிழ் ஆகம சிவமட சைவ மாணவர் சபை முன்னெடுக்கும் மார்கழிப் பெருவிழா இனி வரும் வருடங்கள் தோறும் ஓயாது சைவ பேரெழுச்சியாக எம் மக்களை ஒருங்கிணைக்கவும், கிராமங்கள் தோறும் அதன் எழுச்சி சென்று சேர்வதற்கும் சைவ ஒளி எங்கும் தளைத்து ஓங்குவதற்கும் சிவப்பரம்பொருளின் பேரருள் வேண்டி எல்லோரும் வணங்குவோமாக!

**திருச்சிற்றம்பலம்**

## ஆதிரையான் அருள் பேசும் மார்கழிப் பெருவிழா 2024

# யானைகள் மீது திருமுறைகள் மற்றும் சித்தாந்த சாத்திரங்கள் நகர்வலம்



















# ஆதிரையான் அருள் பேசும் மார்கழிப் பெருவிழா 2024

# யாழ்ப்பாண கலாசார மண்டப நிகழ்வின் நிழல்கள்















# ஈசனைத் தேடிய தென்னாட்டுப் பயணம்-

## அருள்மிகு ஓசைநாயகி உடனுறை தாளபுரீசுவரர் - திருக்கோலக்கா

## தேவாரப் பாடல்பெற்ற 274 சிவபுரங்களில் 15ஆவது திருக்கோயில் திருக்கோலக்கா



**"மடையில் வாளை பாய மாதரார்**
**குடையும் பொய்கைக் கோலக் காவுளான்"**

திருமுலைப்பால் உண்டருளிய திருஞானசம்பந்த சுவாமிகள், கைகொட்டிப் பாடி வந்த நாட்களில் இறைவன் திருவருளால் திருவைந்தெழுத்து எழுதப்பெற்ற பொற்றாளம் பெற்ற அற்புதத் தலமே திருக்கோலக்கா அருள்மிகு ஓசைநாயகி உடனுறை தாளபுரீசுவரர் திருக்கோயில்.

**அமைவிடம்: நாகப்பட்டினம், தமிழ்நாடு.**

இது நாகப்பட்டினம் மாவட்டம் சீர்காழியில் உள்ள பிரம்மபுரீசுவரர் கோயிலில் இருந்து சுமார் 1 கி.மீ. தொலைவில் அமைந்துள்ளது. சீர்காழியிலிருந்து பேருந்து வசதிகள் உள்ளன.

**இறைவர் திருப்பெயர்:** சப்தபுரீசுவரர், தாளேசுவரர், திருத்தாளமுடையார்.
**இறைவியார் திருப்பெயர்:** தொனிப்பிரதாம்பாள், ஓசை கொடுத்த நாயகி.
**கோயில் மரம்:** கொன்றை மரம்
**தீர்த்தம்:** ஆனந்த தீர்த்தம், சூரிய புட்கரணி
**வழிபட்டோர்:** சம்பந்தர், சுந்தரர், அப்பர் , நம்பியாண்டார் நம்பி, சேக்கிழார், அகத்தியர், கண்வர் முதலியோர் வழிபட்டுப் பேறுபெற்ற தலம்.
**பாமாலை:** சம்பந்தர் , சுந்தரர்

**திருத்தலத்தின் மீது பாடப்பட்டத் திருப்பதிகங்கள்**

**திருஞானசம்பந்தர் அருளிய திருப்பதிகம்**

**மடையில் வாளை பாய மாதரார்**
**குடையும் பொய்கைக் கோலக் காவுளான்**
**சடையும் பிறையுஞ் சாம்பற் பூச்சுங்கீள்**
**உடையுங் கொண்ட வுருவ மென்கொலோ (1-23)**

**சுந்தரர் அருளிய திருப்பதிகம்**

**நாளும் இன்னிசை யால்தமிழ் பரப்பும்**
**ஞான சம்பந்த னுக்குல கவர்முன்**
**தாளம் ஈந்தவன் பாடலுக் கிரங்கும்**
**தன்மை யாளனை என்மனக் கருத்தை**
**ஆளும் பூதங்கள் பாடநின் றாடும்**
**அங்க ணன்றனை எண்கணம் இறைஞ்சும்**
**கோளி லிப்பெருங் கோயிலு ளானைக்**
**கோலக் காவினிற் கண்டுகொண் டேனே (7-62-8)**

**திருத்தலச் சிறப்பு**

கைகொட்டிப் பாடிய ஞானசம்பந்தருக்கு இறைவன், திரு-



வைந்தெழுத்து பொறித்த தாளத்தையருள, அதற்குத் தெய்வீக ஓசையை இறைவி தந்து அருள் செய்த தலம். இதன்பொருட்டே இக்கோயில் **“திருத்தாளமுடையார் கோயில்”** என்றழைக்கப்படுகிறது.

ஞானசம்பந்தரின் யாத்திரையில் இதுவே முதல் தலம். பிற்காலத்தில் இப்பகுதியில் தன் ஊமை மகன் பேசும் ஆற்றலைப் பெறவேண்டும் என்று, வேண்டிக் கொண்ட தாய் ஒருத்தி, அவ்வாறே இறையருளால் தன் மகன் பேசும் வல்லமை வெற, மகிழ்ந்து, கோயிலுக்குத் தன் காணிக்கையாகச் செய்து தந்துள்ள “பொற்றாளம்” கோயிலில் உள்ளது. சீர்காழியில் திருமுலைப்பால் திருவிழா நடைபெறும் போது இங்குத் தாளம் வழங்கும் தொன்னம்பிக்கை விழா நடைபெறுகிறது.

இசைக்கலையில் விருப்பமுள்ளவர்கள் இங்கு வந்து வழிபட்டுச் சென்றால் இசையில் வல்லவராகலாம். கோயிலின் நுழைவு வாயிலிலேயே ஞானசம்பந்தருக்கு தாளம் கொடுக்கும் ஈசனும், ஓசை கொடுக்கும் நாயகியும் அருள்பாலிக்கிறார்கள். இந்திரனும் சூரியனும் இத்தலம் வந்து பூசை செய்து பலனடைந்துள்ளனர். இங்கு எழுந்தருளி இருக்கும் திருமகள் மிகுந்த சத்தி வாய்ந்தவர். திருமகள் தவம் செய்து திருமாலுடன் இணைந்த தலம் என்பதால் இத்தலம் திருக்கோலக்கா எனப்பட்டது. ஓசை நாயகியின் சன்னதியில் சொற்பொழிவு நிகழ்த்துபவர்கள், இன்னிசை நிகழ்த்துபவர்கள் மாபெரும் புகழை அடைவார்கள் என்பதும் தொன்னம்பிக்கை.

## திருத்தல வரலாறு

உமையம்மையார் ஞானப்பால் கொடுக்கப்பட்ட திருஞானசம்பந்தர், பல தலங்களுக்கு சென்று, தனது சிறு கைகளால் தாளம் போட்டு பாடுவதைப் பார்த்துகொண்டிருந்த எம்பெருமான். குழந்தையின் கைகள் வலிப்பது பொறாமல், அவருக்கு தங்கத்தால் ஆன இரண்டு தாளங்களை கொடுத்தருளினார்.

சம்பந்தர் அந்த பொற்றாளங்களை தட்டிய போது சத்தம் வரவில்லை உடனே அந்த தாளத்திற்கு ஓசை கொடுத்தார் உமையம்மையார். எனவே தான் இங்குள்ள மூலவர் தாளபுரீசுவரர் எனவும், அம்மன் ஓசைநாயகி எனவும் அழைக்கப்படுகிறார்கள்.

## திருக்கோயில் அமைப்பு

கோயில் புதுப்பொலிவுடன் திகழ்கிறது. எதிரில் திருக்குளம் - ஆனந்தத் தீர்த்தம். முகப்பு வாயிலின் மேற்புறத்தில் வண்ணச் சுதையில் இடபவாகனர் அருட்காட்சி. நுழையும்போது நால்வர், அதிகார நந்தி சந்நிதிகள் உள்ளன. வீதியில் விநாயகர், அம்மையப்ப முருகர் (சோமாஸ்கந்தர்), சுப்பிரமணியர், திருமகள், சனிக் கடவுள், வைரவர், சூரியன் சந்நிதிகள் உள்ளன.

உள் மண்டபத்தில் வலப்பால் எழுந்தருளல் திருமேனிகள் பாதுகாத்து வைக்கப்பட்டுள்ளன. நடராச சபை உள்ளது. நேரே மூலவர். கம்பீரமான இலிங்கத் திருமேனி. அம்பாள் சந்நிதி தனிக்கோயிலாகவுள்ளது - நின்ற திருமேனி. ஞானசம்பந்தர் பொன் தாளத்தை இரு கைகளிலும் ஏந்தி






நிற்கும் எழுந்தருளல் திருமேனி. சுற்றுத் திருமுன்களாக விநாயகர், தென்முகக் கடவுள், பெருஞ்சோதியன் (இலிங்கோற்பவர்), நான்முகன், மலைமகள் ஆகியோர் உள்ளனர்.

சீகாழியில் திருமுலைப்பால் திருவிழா நடைபெறும் போது, இத்தலத்தில் தாளம் வழங்கும் நம்பிக்கை விழா நடை பெறுகிறது. கார்த்திகைச் சோம வாரங்கள், ஒன்பானிரவு , சட்டி, சிவனிரவு, கழுவாய் வழிபாடு முதலிய சிறப்பு விழாக்கள் நடைபெறுகின்றன.

திருச்சிற்றம்பலம்

**சிவத்திரு. தென்னாடு நிலவன்**
**தகவல் - சைவசமயக் கலைக்களஞ்சியம் நூற்தொகுப்பு**

# திருத்தொண்டர் புராணம் எனும் பெரிய புராணத்தின் பேருரை ஆசிரியர்
# சிவக்கவிமணி சி.கே. சுப்பிரமணிய முதலியார் ஐயாவின் உரை நயம்

**(சென்ற இதழ்த் தொடர்ச்சி)**

**பாடல் 10 நூற்பெயர்**

**இங்கிதன் நாமம் கூறின் இவ்வுல கத்து முன்னாள்**
**தங்கிருள் இரண்டில் மாக்கள் சிந்தையுட் சார்ந்து நின்ற**
**பொங்கிய இருளை ஏனைப் புறஇருள் போக்கு கின்ற**
**செங்கதி ரவன்போல் நீக்கும் திருத்தொண்டர் புராணம் என்பாம்**



**சிவக்கவிமணி**
**சி.கே சுப்பிரமணிய முதலியார்**

**பொருள்:**

இருவேறு இருள்களுள்ளே மற்றப் புற இருளைப் போக்குகின்ற சூரியனைப் போல, மாக்களின் உயிரினிடத்தில் பொருந்தி நின்று பொங்கிய அக இருளாகிய ஆணவத்தைப் போக்குகின்ற திருத்தொண்டர் புராணம் என்று சொல்வோம்.

**வி-உரை :** ஆசிரியர் இதற்கு இட்டபெயர் திருத்தொண்டர் புராணம் என்பது. புற இருள் போக்குகின்ற கதிரவன் போல் அக இருளைப் போக்குகின்ற புராணம் என்பது கருத்து. பொருள்களைக் காணவொட்டாமல் புறஇருள் கண்ணை மறைத்துக் கொண்டிருக்கும். தன்னை அறியும் படிக்காட்டி நிற்கும். அக இருளாகிய ஆணவம் உயிர்தன்னையும் இறைவனையும் காணவொட்டாது மறைத்து நிற்கின்றதேயன்றித் தன்னையும் மறைத்துக் கொண்டு நிற்கும் வலிமையுடையது.



பவானி சிவ
அ.வேலுச்சாமி

**"ஒரு பொருளும் காட்டாது இருள் உருவம் காட்டும்**
**இரு பொருளும் காட்டாது இது" (திருவருட்பயன் - இருள்மலநிலை)**

**மாக்கள் -** ஆணவமாகிய அக இருளில் மூடப்பட்டார் நன்மை தீமை நாடியறியும் அறிவில்லாதவராதலின் மாக்களே ஆவர் என்பார். மாக்களை மக்களாக்கும் தன்மையுடையது இப்புராணம்.

**சார்தல் -** அநாதியே பந்தித்தல் - சார்ந்தனன் வண்ணமாகிய உயிர்களைத் தன் வயமாக்குவது. "ஆணவத்தோடத்துவித மானபடி" என்பது தாயுமானவர் வாக்கு.

**பொங்குதல் -** தன் செயலைப் பல சத்திகளாலும் செய்து கொண்டு உயிர்களைப் பிறவிகளில் மேன்மேலும் செலுத்துதல்.

பாயிரமாகிய இப்பகுதியில் முதல்பாட்டு இறைவன் திருமொழியும், இரண்டாவது பாட்டு அவன் துதியுமாம். மூன்றாவது பாட்டு காப்புக்கடவுள் விநாயகர் வணக்கமாம். நான்காவது பாடல் நூல் நுதலிய பொருள் கூறிற்று. 5,6,7 ஆவது திருப்பாட்டுக்கள் அயைடக்கம் கூறுவது. 8 வது பாட்டு நூல் வந்த வழியையும் 10 வது பாடல் நூற்பெயர் நூல்பயனையும் அறிவிப்பனவாம்.

**"ஆக்கியோன் பெயரே வழியே எல்லை,**
**நூற்பெயர் யாப்பே நுதலிய பொருளே**
**கேட்போர் பயனோ டாயெண் பொருளும்,**
**வாய்ப்பக் காட்டல் பாயிரத்தியல்பே"**

என்ற இலக்கணத்திற்கு ஏற்ப அமையப் பெற்றது கூத்தப் பெருமானின் திருவருட் கருணையே.

**திருமலைச் சிறப்பு :**

இப்புராண அடியார் திறங்கள் உலகத்திலே தெரிதற் கேதுவாய்த் திருமலையில் நிகழ்ந்த வரலாற்றை உரைக்கும் பகுதி. சுந்தரமூர்த்தி சுவாமிகள் திருவாரூரிலே பாடியருளிய திருத்தொண்டத் தொகையே இப் புராணத்துக்கு மூலமாம். அவர் திருக்கயிலை மலையிலிருந்து இவ்வுலகிலே தோன்ற நேர்ந்ததும், திருவாரூரிலே போந்து திருத்தொண்டத் தொகை பாட நிகழ்ந்ததுஆகிய வரலாறு இச்சருக்கத்திலே பேசப்பெறும்.

**திருமலை :-** திருக்கயிலைமலை திருத்தொண்டத் தொகை பாடியபின் இறுதியில் நம்பிகள் திருமலைக்குத் திரும்பி அணைந்த வரலாறு இறுதிச் சருக்கம் ஆகிய இந்த பகுதியில் திருமலைச்சிறப்பு, திருநாட்டுச்சிறப்பு, திருவாரூர்த் திருநகரச்சிறப்பு, திருச்கூட்டச் சிறப்பு தடுத்தாட் கொண்ட

புராணம் என ஐந்து உட்பகுதிகளை உடையது.

பாடல் - 01

**பொன்னின் வெண்டிரு நீறு புனைந்தெனப்**
**பன்னு நீள்பனி மால்வரைப் பாலது**
**தன்னை யார்க்கு மறிவரி யானென்றும்**
**மன்னி வாழ்கயி லைத்திரு மாமலை**

பொருள்:

பொன்னின் மேலே வெள்ளிய திருநீற்றை அணிந்தாற் போல எடுத்துச் சொல்லற்குரிய நீண்ட இமய மலையின் பகுதியில் உள்ளது. யாவர்க்கும் தனது தன்மையை இன்ன தென்று அறிவதற்கு அரிதாயிருக்கின்ற சிவபெருமான் எக்காலத் தும் நீங்காமல் பொருந்தி வாழ்தற்கிடமாகிய கயிலை என் கின்ற பெரிய திருமலையாகும்.

திருமலையின் சிறப்புக் கூறுவதுடன் சுந்தர மூர்த்தி சாமி கள் கயிலாயத்திலிருந்து நிலவுலகில் அவதரிக்க நேர்ந்த சரிதமும் இதில் கூறப்பெற்றது. சுந்தர மூர்த்தி சாமிகள் நிலவுலகிற்குப் புறப்பட்டதும் மீண்டும் சேர்ந்ததும் இம் மலையேயாதலாலும், இப்புராணத்திற்கு மூல நூலாகிய திருத்தொண்டத் தொகை கிடைப்பதற்கு மூல காரணமாகிய நிகழ்ச்சி நிகழ்ந்த இடம் ஆதலாலும் இம்மலைச் சிறப்பைக் கொண்டு புராணம் தொடங்குகின்றார் ஆசிரியர்.

**விளக்க உரை :** பொன்னின் வெண்திருநீறு புனைந்தென - இஃது உவமானம். பொன்னின் மேல் வெள்ளிய திருநீறு அணிந்தாற்போல மால் வரையின் மேலே பனி உறைந்து உள்ளது என்பது.

**பனிமால்வரை :** பெரிய இமயமலை, பன்னும், பலவாற் றாலும் புகழ்ந்து பேசப்படுவது. பனிக்கட்டியாக உறைந்து கிடக்கும் மலையாதலின் பனிமால்வரை என்றார். இஃது அன்பின் நீர்மை உறைப்புப் பெற்றுத் தங்கும் இடம் என்று சிவக்கவிமணி ஐயா அவர்கள் கூறியுள்ளார் இறைவனு டைய திருக்கயிலை இதில் இருத்தலின் என்க. உலகிலே மிக உயர்ந்த மலையின் மிக உயர்ந்த சிகரம் கயிலை மலையாம். இஃது எப்பொழுதும் பனிக்கட்டியால் மூடப்பெற்றிருக்கும். ஆதலின் வெண்மையால் வெண்ணீற்றுக் கோலமாய் விளங் கும்.

**தன்னை யார்க்கும் அறிவரியான் :** **“இன்ன தன்மையன் என்று அறியொண்ணா எம்மானை”** என்பது சுந்தரமூர்த்தி சாமிகளது திருவாரூர்த் தேவாரம். **“யாவராயினும் அன்பரன்றி அறியொணா மலர்ச் சோதியாம்”** என்பது மணிவாசகர் வாக்கு. **“பொன்னெடுங் குன்றமொன்றுண்டு கண்டீர்”** என்று அப்பர் சாமிகள் துதித்தருளிய படி பொன்மலையும் கயிலை வெண் சிகரமும் இறைவன் வடிவமாகவே விளங்குவன. ஆதலின் அத் தோற்றத்திற்குள்ளே **“அரியான்”** மன்னி வாழ்கின்றான் என்று குறிப்பிட்டபடியாம்.

**மன்னிவாழ் கயிலைத் திருமலை :-** இத்திருமலையையே சிவ சொரூபமாகக் கண்டு அதனுள்ளே சிவத்தையும் கண்டு ஆசிரியர் தரிசித்து நம்மையும் தரிசிக்கச் செய்கின்றபடி காண்க.

**கயிலை :-** இது பூகைலாயம் நூல்களில் பேசப் பெறும் மகா கயிலாயமன்று என்று உரையாசிரியர் சிவக்கவிமணி ஐயா அவர்கள் கூறுகின்றார்கள். இங்கே மன்மத தகனம் சனகாதி முனிவர்களுக்கு உபதேசம் முதலியன நிகழ்ந்தன. அப்பர் சுவாமிகள் திருக்கயிலை யாத்திரை செய்த இடம் இஃதே இறைவன் மும்மூர்த்திகட்கு முதல்வராய் உபதேசம் செய்தனர் என்பது வரலாறு. இதில் ஐம்பெரும் மாமுனி வர்களின் ஆசிரமங்களும் உள்ளன என்று கூறப்பெறுகின்றது.

**என்றும் மன்னி :** எக்காலத்திலும் நீங்காது நிலைபெற்று ஊழிக்காலத்திலும் தான் அழியாமல் நிற்பதாலும், எல்லா- வற்றையும் அழிக்கும் நாயகனாகிய சிவபெருமானுக்கு இருப்பிடமாய் நிற்பதாலும் என்றும் எக்காலத்தும் என்றார். இதனையே திருநொடித்தான்மலை என்று சுந்தரமூர்த்தி சாமிகள் தேவாரத்தில் போற்றுதல் காண்க. நொடித்தல் - அழித்தல். காரைக்காலம்மையார் தலையால் நடந்து சென்ற கயிலை இது.

திருமலைச் சிறப்பு - பாடல் 02

**“அண்ணல் வீற்றிருக் கப்பெற்ற தாதலின்**
**நண்ணு மூன்றுல கும்நான் மறைகளும்**
**எண்ணில் மாதவஞ் செய்யவந் தெய்திய**
**புண்ணி யந்திரண் டுள்ளது போல்வது”**

பொருள் யாவர்க்கும் மேலாம் அளவிலாச் சீருடையனா கிய பெருமையுடைய சிவபெருமான் விரும்பி எழுந்தருளி என்றும் மன்னியிருக்கும் பேறுபெற்ற மலையாதலால், மூன்று உலகங்களும், நான்கு வேதங்களும், அளவில் லாத பெருந்தவம் செய்ததனால் நேரே கண்ணால் காணும் படி வந்து சேர்ந்த புண்ணியங்கலான யாவையும் ஒருங்கு சேர்ந்து உருவெடுத்து நிலைத்ததே போன்றுள்ளதாம் இத்திரு மலை.

**விளக்க உரை :** அண்ணல் பெருமையுடையான் சிவ பெருமானையே குறிக்கும். அவன் புண்ணியமூர்த்தியாதலால் அவன் எழுந்தருளியிருப்பதான இத்திருமலையும் புண்ணி யச் சொரூபமுடையது. **“பூதநாயகன் புண்ணியமூர்த்தியே”** என்பது அப்பர்சாமிகள் திருவாக்கு.

நண்ணும் மூன்றுலகு உயிர்கள் உலகங்களில் புகுந்தே தங்கள் வினைகளை ஒழிக்க வேண்டியிருத்தலால் நண்ணும் என்றார். புண்ணிய அனுபவம் மேல் உலகத்திலும் பாவ அனுபவம் கீழுலகத்திலும் செய்யப்பட்டுக் கழித்தருள் உயிர்கள் நடு உலகமாகிய இந்நில உலகில் பிறந்து சிவபுண் ணியம் செய்தே அது காரணமாக வீடுபெறுவர் என்பது சாந்திரங்களின் முடிவு. நடு உலகத்தின் பயன் சிவபுண்ணிய மாயிற்று. சிவபுண்ணியங்களின் பயனாய்த் திருமலை நின்றது என்று சிவக்கவிமணி ஐயா அவர்கள் கூறியுள்ளார்.

நான்மறை தவம் செய்வதாவது மறைக்காடு முதலிய தலங் களில் அருச்சித்து இறைவனைத் தமக்குள்ளே விளங்கும்படி பெறுதல்.

வந்து எய்திய - தவம் செய்ததனால் உருவெடுத்து முன்னே வந்து பொருந்தியது போலும், பெரியோர் வசனமும் வேத வசனமும் பொய்யாகாமல் காட்சிப்படும் பொருட்டு அவர்கள் தவம்செய்ய உருவுடன் ஈசன் இருக்கும் இடமாகியது.

புண்ணியம் திரண்டு உள்ளது - புண்ணியமாவது தவத் தின் பயன் புண்ணியத்தின் நிறம் வெண்மை என்பர். புண்ணி யமே உருவெடுத்தல் போன்றுள்ளது. திருமலை என்பது கருத்து. புண்ணியத்தின் இடமாக வீற்றிருப்பது போலவே இத்திருமலையில் இறைவன் வீற்றிருக்கின்றதனால் இதற்குப் புண்ணியத் திரட்சி உவமானமாயிற்று.

தொடரும்

திருச்சிற்றம்பலம்

ஆக்கம் : பவானி சிவ அ. வேலுச்சாமி
நன்றிகள் - சமயத்தமிழ் திங்கள் இதழ்

# தென்னாடு சைவ மாணவர் சபை நடாத்திய ஆதிரையான் அருள் பேசும் மார்கழிப் பெருவிழா

தமிழகத்தின் பல்வேறு மாவட்டங்களிலும் மார்கழி விழாக்கள் நடைபெறுகின்ற போதும், ஈழத்திருநாட்டில் கடந்த 2021ம் ஆண்டில் இருந்து தென்னாடு செந்தமிழ் ஆகம சிவமடத்தின் சைவ மாணவர் சபை, மார்கழிப் பெருவிழா எனும் கருத்தாக்கத்தில் சிவத்தின் மற்றும் சைவத்தின் பெருமைகளை திருமுறைகள் வழி எடுத்தியம்பும் பிரமாண்ட விழாவாக கொண்டாடி வருகிறது. இம்முறை நான்காவது ஆண்டாக யானைகள் மீது திருமுறைகள் மற்றும் சித்தாந்த சாத்திரங்கள் நகர்வலத்துடன் மிகச் சிறப்பாக நடைபெற்று முடிந்துள்ளது.

இவ்விழாவில் வெளி மாவட்டங்களில் இருந்தும் பல அறநெறி ஆசிரியர்கள் மற்றும் அமைப்பாளர்கள் கலந்து சிறப்பித் திருந்தனர். குறிப்பாக திருகோணமலை, சம்பூர், மூதூர் ஆகிய இடங்களைச் சேர்ந்த 63 பேரும், திருகோணமலை வெருகலைச் சேர்ந்த 63 பேரும், மட்டக்களப்பு மற்றும் அம்பாறை மாவட்டங்களைச் சேர்ந்த 84 பேரும், பதுளை மாவட்டத்தைச் சேர்ந்த 46 பேரும், ஹற்றனைச் சேர்ந்த 12 பேரும் என அடியார்கள் இரண்டு நாட்கள் யாழ்ப்பாணத் தில் தங்கியிருந்து விழாவில் பங்குபற்றியிருந்தனர். மொத்த மாக 700 இற்கும் மேற்பட்ட அடியார்கள் விழாவில் கலந்து கொண்டு பயன் பெற்றிருந்தனர்.

## தில்லைக்கூத்தன் திருவம்பலம்

காலை 8.30 மணியளவில் வண்ணை வைத்தீசுவரர் திருக்கோயில் வழிபாட்டைத் தொடர்ந்து, திருக்கோயில் வாயிலிருந்து யாழ்ப்பாண கலாசார மண்டபம் வரை யானைகள் மீது திருமுறைகள் மற்றும் சித்தாந்த சாத்திரங்கள் நகர்வலம் இடம்பெற்று அரங்கங்கள் ஆரம்பமாகியிருந்தது. காலை, மாலை என இரு அரங்கங்களாக விழா இடம்பெற்றிருந்தது. அந்த வகையில் காலை அரங்கமாகிய தில்லைக்கூத்தன் திருவம்பலம் காலை 9.30 மணியளவில் அம்மையப்பர் வழிபாட்டுடன் ஆரம்பமாகியிருந்தது. இவ்வழிபாட்டை செந்தமிழ் வேள்வி வித்தகர் சிவ. பழனிச்சாமி குமரலிங்கம் ஐயா அவர்கள் ஆற்றி வைத்தார்கள்.

அதனைத் தொடர்ந்து தொடக்க உரையை வடமாகாண ஆளுநர் சிவத்திரு. நாகலிங்கம் வேதநாயகன் ஐயா அவர்கள் வழங்கியிருந்தார். அவர் தனது உரையில் **“மார்கழி மாதத்தில் திருவெம்பாவை வழிபாடுகள் அருகி வருகின்றன. இறை வனிடம் வேண்டுதல்கள் இல்லாமல் அன்புடன் வழிபடவேண்டும், இறைவன் தானே தருவான். தென்னாடு இளையவர்களை கொண்டு சைவத்தமிழ் வளர்ப்பது வியக்கவைக்கிறது. அவர்களைப் பாராட்டுகிறேன்.”** என்ற விடயங்களை முன் வைத்தி ருந்தார். அதனைத் தொடர்ந்து பழனி ஆதீன குருமகாசந்நிதா னம் தவத்திரு. சாது சண்முக அடிகளார் அவர்கள் அருளுரை வழங்கியிருந்தார். தொடர்ந்து கலாநிதி கிருபாசக்தி அம்மை யார் குழுவினரின் (இசைத்துறை முதுநிலை விரிவுரையாளர், யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்) திருமுறை விண்ணப்பம் இடம்பெற்றிருந்தது. அந்நிகழ்வைத் தொடர்ந்து காலை அரங் கத்திற்கு தலைமை தாங்கிக்கொண்டிருந்த சிற்றி காட் வெயாரின் முதல்வர் சிவத்திரு. சோமசுந்தரம் பிரகதீஸ்வரன் அவர்கள் தலைமை உரையை வழங்கியிருந்தார்.

அவரைத் தொடர்ந்து, வடமாகாண பிரதம செயலாளர் சிவத்திரு. இலட்சுமணன் இளங்கோவன் அவர்கள் வாழ்த் துரையை வழங்கியிருந்தார். அவர் தனது உரையில் **“இன்று நாம் தமிழ் சைவத்தில் நிற்பதற்கு காரணம் எங்கள் குருமார், அவர்கள் பண்டிதர்கள். திருமுறை எங்கள் முதன்மை நூல்கள். இராச இராச சோழன் திருமுறைகளை மீட்டது போல் ஒத்த நிகழ்வாகவே தென்னாடு திருமுறை நகர்வலம் இடம்பெற் றது. வீடுகளில் தேவாரங்களை பண்ணுடன் பாடினோம். இன்று சமய புத்தகங்களில் எது தலை எது வால் என்று தெரியாமல் இருக்கிறது. ஒரு தொடர்ச்சியான படிமுறை இருக்க-வேண்டும். விஞ்ஞானத்துடன் சேர்ந்த மெஞ்ஞானம் வெளி-வரவேண்டும்.”** என்ற கருத்துக்களை வெளிப்படுத்தியி-ருந்தார். அதனைத் தொடர்ந்து, தென்னாடு முதல்வர் சிவத்திரு. குணரத்தினம் பார்த்தீபன் அவர்களின் உரை இடம்பெற்றிருந்தது. அதனைத் தொடர்ந்து, அன் றைய விழாவை சிறப்பிக்க தமிழ்நாட்டிலிருந்து வருகை தந் திருந்த தஞ்சாவூர் தமிழ்ப் பல்கலைக்கழக உதவி பேராசிரி யர் முனைவர் கோ. ப. நல்லசிவம் ஐயா அவர்கள் ‘திரு நெறியத் தமிழ்’ என்ற தலைப்பில் அருமையான இசை உரையை வழங்கியிருந்தார். அவரது உரையைத் தொடர்ந்து கொடை யாளர்களை கௌரவிக்கும் நிகழ்வு இடம்பெற்று காலை அரங்கம் நிறைவுற்றது.

## சேக்கிழார் அரங்கம்

அடியார்களிற்கு அமுது வழங்கலைத் தொடர்ந்து 1.30 மணியளவில் மாலை அரங்கமாகிய சேக்கிழார் அரங்கம், ஐம்பெரும் புராணம் ஓதலுடன் ஆரம்பமாகியிருந்தது. மாலை அரங்கத்தின் முதல் நிகழ்வாக சிவகுரு ஆதீன முதல்வர் தவத் திரு. வேலன் சுவாமிகள் அவர்கள் அருளுரை வழங்கியிருந் தார். அவரது உரையைத் தொடர்ந்து, மாலை அரங்கத்திற்கு தலைமை ஏற்றிருந்த வலம்புரி பத்திரிகையின் தலைமை ஆசிரியர் சிவத்திரு. நல்லையா விஜயசுந்தரம் அவர்களின் தலைமை உரை இடம்பெற்றிருந்தது. அதனைத் தொடர்ந்து இணுவில் குமரநர்த்தனாலயத்தின் நாட்டிய அஞ்சலி இடம்பெற்றிருந்தது.

அதனைத் தொடர்ந்து, செந்தமிழ் வேள்விச் சதுரர் சிவ. பழனிச்சாமி குமாரலிங்கம் ஐயா அவர்கள், **“அடியார் பெருமை”** என்ற தலைப்பிலான சிறப்புரை இடம்பெற்றிருந்தது. அதனைத் தொடர்ந்து ஈழத்து புகழ்பூத்த பேச்சாளர் பேராத னைப் பல்கலைக்கழக தமிழ்த் துறை தலைவர் பேராசிரி யர். ஸ்ரீ பிரசாந்தன் அவர்கள் **“சங்கரன் தாள் மறவாமைப் பொருள்”** என்ற தலைப்பில் அனைவரையும் கவரும் வகை யிலான சிறப்புரையை வழங்கியிருந்தார். தொடர்ந்து இளையோர் அரங்கமாக **‘இன்றைய இளையோரின் பத்தி நெறியை வளர்ப்பது, குடும்பமே! பள்ளியே’** எனும் தலைப் பில் பட்டிமண்டபம் இடம்பெற்றிருந்தது. கோப்பாய் ஆசிரியர் கலாசாலை அதிபர் சிவத்திரு. சந்திரமௌலீசன் லலீசன் ஐயா அவர்கள் இதற்கு தலைமை வகித்திருந்தார். தொடர்ந்து மெய்கண்டார் விருது வழங்கலும், திருவாசகப் போட்டிகளுக்கான பரிசில் வழங்கல்களும் இடம்பெற்றி ருந்தன. அதனைத் தொடர்ந்து நன்றியுரையினை சைவ மாணவர் சபையின் தலைவர் சிவத்திரு. வனராஜ் சசிராஜ் அவர்கள் வழங்கி வைத்தலுடன் நிகழ்வு இனிதே நிறைவுற்றது.

யாழ்ப்பாணத்தில் முதன்முறையாக யானைகள் மீது திரு முறைகள் மற்றும் சித்தாந்த சாத்திரங்கள் நகர்வலத்துடன் இடம்பெற்ற பெருவிழாவாக, இந்நிகழ்வு நிறைவேறியிருந் தமை தென்னாடு ஐம்பூதநாதர் திருவருளே.

திருச்சிற்றம்பலம்

# ஆதிரையான் அருள் பேசும் மார்கழிப் பெருவிழா


தொடக்க உரை
சிவத்திரு.
நாகலிங்கம் வேதநாயகன்


அருளுரை
தவத்திரு. சாது சண்முக
அடிகளார்


தலைமை உரை (காலை)
சிவத்திரு. சோமசுந்தரம்
பிரகதீஸ்வரன்


வாழ்த்துரை
சிவத்திரு.
இலட்சுமணன் இளங்கோவன்


தென்னாடு முதல்வர் உரை
சிவத்திரு.
தென்னவன் பார்த்தீபன்


சிறப்புரை
முனைவர்
கோ.ப.நல்லசிவம்


அருளுரை
தவத்திரு.
வேலன் சுவாமிகள்


தலைமை உரை (மாலை)
சிவத்திரு.
நல்லையா விஜயசுந்தரம்


சிறப்புரை
சிவ. பழனிச்சாமி
குமரலிங்கம்


சிறப்புரை
பேராசிரியர் சிவத்திரு.
ஸ்ரீ.பிரசாந்தன்


பட்டி மண்டபம் - தலைமை
சிவத்திரு.
சந்திரமௌலீசன் லலீசன்


நன்றியுரை
சிவத்திரு.
வனராஜ் சசிராஜ்

**Siva P.Ketharan**
English Editor – Thennadu
Thennadu Tamil Atheenam (Madam) – Australia
+61 49949 3300, ketharan@thennadu.org




# Virunthompal the Beauty of Tamil Culture

One of the best aspects of Tamil culture is the priority we give to the concept of Virunthompal or Hospitality. This long-standing custom of paying respect to visitors transcends simple cultural customs and is a powerful representation of Tamil society's moral and spiritual values. Virunthombal embodies the everlasting ideals of humanism and respect, which are firmly anchored in the concepts of Aram (virtue), as proclaimed in ancient Tamil writings. It emphasises the idea that compassion is a basic human obligation rather than just a choice.

Thiruvalluvar gave Virunthombal great importance in the Thirukkural, which is without a doubt one of the most significant writings in Tamil history. Thirukkural 82, one of its classic couplets, is a perfect example of the Tamil culture's revered value of hospitality. The couplet says:

**"விருந்து புறத்ததாத் தானுண்டல் சாவா**

**மருந்தெனினும் வேண்டற்பாற் றன்று."**

("It is not fit that one should wish his guests to be outside (his house) even though he were eating the food of immortality.")

This couplet highlights the moral obligation of hosts to treat their guests with the utmost respect and dignity. Thiruvalluvar juxtaposes personal gain, symbolised by the "food of immortality," with the moral responsibility of hosting guests. The message is unequivocal: no matter the magnitude of personal benefit, it is unworthy of a person to prioritise their own comfort over the well-being of their guests.

The emphasis on hospitality in Tamil culture, which transcends material needs and self-interest, is brilliantly captured in this verse. Ignoring a guest is a betrayal of one's moral character, not just a breach of duty. Thiruvalluvar uses this to illustrate that genuine virtue is found in respecting others and being selfless.

Acts of hospitality are very common even in the modern day. When Tamil families welcome guests into their homes, it is almost unheard of for the visitors to leave without being offered a steaming cup of tea or delicious food. This is a result of the persisting nature of Tamil tradition to treat visitors to generous gestures of hospitality, no matter the cost. This practice not only embodies the cultural value of virunthombal but also fosters a sense of belonging and connection, reinforcing the Tamil belief that guests should be treated as part of the family.

In this light, virunthombal becomes not just an act of hospitality but a profound expression of selflessness, embodying the Tamil tradition of extending compassion and care to all, especially the most vulnerable. Ultimately, Tamil culture and heritage have many customs and traditions that I believe should be preserved for future generations, but Virunthompal is one of few that is much above the rest and should be kept in practice for millennia to come. Long live Tamil Culture.



# The Life and Devotion of Iyarpagai Nayanar: The Second Nayanar



Srisankarshan Srisatkunarajah
English Eeditor
2023 Batch,
Jaffna Hindu College

Continuing the exploration of the Periya Puranam, the luminous chronicle of the 63 pious Saivite Tamil Saints, this account delves into the life of the third Nayanar, Iyarpagai Nayanar. A paragon of selfless devotion and unwavering commitment to both the spirit and tenets of Shaivism, Iyarpagai Nayanar's life offers riveting insights into the power of faith and the sanctity of divine service.

### Origins and Early Life

Iyarpagai Nayanar was born into a prosperous and devout family of traders in the fertile Chola kingdom. Known for his unwavering adherence to Lord Shiva's principles, he earned the name "Iyarpagai," meaning, "beyond the ordinary." This epithet aptly reflects his extraordinary acts of devotion that transcended trivialised societal norms and expectations, proving their futility and irrelevance.

From a young age, Iyarpagai Nayanar demonstrated an unshakeable belief in the divine, dedicating his life to Sivaperuman, his devotees and servitude. He believed that serving Lord Siva's clans of devotees, was equivalent to serving the Lord Himself, a familiar concept throughout Periyapuranam, which he upheld with steadfast resolve.

### The Ultimate Test

There always is a defining moment in any

extraordinary devotee's life, one well intentioned and orchestrated by the divine! Such a moment of Iyarpagai Nayanar's life came when Lord Shiva, disguised as a devotee, sought to test his devotion. The devotee approached Iyarpagai with an unusual request: to provide his wife as an offering to fulfil a vow. The request defied trivial societal norms and personal emotion! Yet, Iyarpagai Nayanar did not hesitate. He saw the devotee as a manifestation of Lord Shiva and was determined to fulfil the request without question. A level of truly unmatched faith!

With a heart filled with devotion and not even a stain of any other mundane thought or emotion, Iyarpagai Nayanar informed his wife of the devotee's request. Remarkably, she too shared his unwavering faith and agreed to accompany the devotee. As the devotee led her away, the townspeople, unable to comprehend the profundity of Iyarpagai's faith, confronted him with outrage and disbelief. There was bloodshed, Iyarpagayar simply couldn't let the futile collective consciousness of the so-called 'society' and it's ridiculous self-proclaimed 'reach' taint divine process. Iyarpagai remained resolute, trusting entirely in the divine will and did the duly to see it through, quite literally.

As they walked through the forest, the devotee asked the Nayanar to wash his hands of the spouse for good, words which he took as nothing but revelations from the absolute supreme himself. In response, Iyarpagayar adapted a steady stride of satisfaction and accomplishment away from the pair and to his daily normalities. He was interrupted by the devotee's calls. The devotee called for his return! Without giving it any inquisitive thought, as he turned around, 'there was speech but no form, a strong presence but no definition', it must have felt electric ofcourse, as Iyarpagayar experienced an unfathomable feet of (bliss)Aanandam, as the presence revealed its true form as Lord Shiva, materialistically manifested all for the perception of the Iyarpagai couple. The Lord blessed Iyarpagai Nayanar and his wife for their unparalleled devotion, restoring them to their rightful place and ensuring their eternal fame as exemplars of faith.

## Legacy and Lessons

Iyarpagai Nayanar's story is a testament to the boundless potential of faith and selflessness. His willingness to transcend personal attachments and societal expectations for the sake of divine service highlights the core tenets of Shaivism: surrender, humility, and unwavering devotion.

His life challenges us to reflect on the limits of our own faith. How far are we willing to go to uphold our principles? Are we prepared to place our trust entirely in the divine, even when faced with incomprehensible trials? Through such introspection, we can aspire to embody the spirit of Iyarpagai Nayanar in our own lives in an educated viewpoint.


## Conclusion

The life of Iyarpagai Nayanar stands as a shining example of extraordinary faith and dedication. As we continue our journey through the Periya Puranam, his story inspires us to deepen our devotion and embrace the divine in all its manifestations. In the next article, we will uncover the life of another illustrious Nayanar, unravelling further the divine tapestry of devotion woven within this sacred text.

# History of the Ancient Tamils



Tamil Culture and society have blessed the world we live in for thousands of years, producing advancements that continue to flourish today. For Tamils, our heritage is a source of immense pride and a testament to our resilience and unity. Tamil is more than a language or culture but an identity that thousands of people have died to protect and preserve. When asked about our identity regardless of where we were born or raised, we Tamils will universally respond, "I am Tamil." This very pride is echoed in the words of Subramania Bharathiar, who famously said, **"தமிழனென்று சொல்லடா தலை நிமிர்ந்து நில்லடா"** ("Say with pride that you are Tamil; stand tall with your head held high."). This powerful statement not only emphasises the importance of recognising and embracing one's Tamil identity but also calls for a sense of dignity and self-respect in every circumstance. It importantly preaches that being Tamil is not just about a language but about standing firmly in the face of challenges and taking pride in our roots, a philosophy that many leaders throughout our history have embraced. Tamil is a bond that has united us and held strong, fortified by a vibrant history filled with knowledge and innovation. To truly understand why Tamils are so proud of who they are and what they stand for, one must delve into their remarkable history.




Siva P.Ketharan
English Editor – Thennadu


## Stone Age

The Stone Age in ancient India is immensely old, but unsurprisingly, its oldest traces are found in Tamil Nadu, at Attirampakkam. This site is renowned for the discovery of the oldest stone tools in the country, dating back 1 to 1.7 million years. These extraordinary findings have reshaped existing theories of early human migration out of Africa and suggest that modern-day Tamil Nadu was home to the earliest human activities in South Asia. Stone-made hand axes and cleavers used by our ancestors were found in the region. Approximately 3,000 quartzite artefacts were uncovered in a single trench, indicating that the population actively mined the rock and produced tools near the site. All the tools found were observed to have been crafted with extreme precision highlighting our ancestors' sophistication in analytical thinking.

## Iron Age

Like the Stone Age, the Iron Age of Tamil Nadu is also incredibly old with respect to other civilisations with researchers saying it began around 4200 years ago. This has been confirmed by carbon dating at a place called Mayiladumparai, a habitation and burial site. There have been many valuable findings such as a 60cm long full-length iron sword with a handle, emphasising the knowledge and skill of the ancient Tamils. This and the various other findings are significant as they explain the huge agricultural dominance of the Tamils, with iron being integral to clearing land to support agriculture. All these exceptional findings beg the question, should the history of India start from ancient Tamil land or perhaps even the history of humanity?

**Contd...**

# Miracles of Saiva Saint Thirugnanasampanthar Swamikal



Siva
P.Abiram
SG

Thirugnanasampanthar was a Saiva poet/saint, who lived in the seventh century CE.He is one of the most prominent saints amongst the 63 Nayanars. Sampathar's entire collection of hymns about Lord Sivan is called "Thirukkadaikappu''. These were later collected to form the first three volumes of the Thirumuraigal – one of the principle texts for Saiva Sithantham philosophy.

After Sampanthar and Appar opened the doors at the Thirumaraikkadu koyil, they returned to their resort. However, Appar could not sleep. He reflected on how the doors had opened only after he had sung numerous songs and even scolded Sivan for being merciless, whereas the doors had opened immediately after Sampanthar had sung just one song. Troubled by this, Appar wondered, "Have I acted against the will of God?" With these thoughts weighing on his mind, he eventually drifted into sleep.

In his dream, Appar heard Sivan's voice call him to Thiruvaimoor. Upon waking Appar noticed a divine light moving towards Vaimoor. Appar followed the light, which led him to the temple at Vaimoor before disappearing inside. Appar, now unable to see the light, stood outside the temple in awe.

When Sampanthar realised that Appar was missing from the resort, he too journeyed to Vaimoor in search of him. Upon seeing Sampanthar, Appar humbly acknowledged, "Sampanthar's songs are far more powerful than mine. Now that he has arrived, can you hide yourself even from him, O Lord?" In response, Sivan revealed his divine dance, first to Sampanthar and then to Appar. Overwhelmed with joy, Appar sang with ecstasy, "I have seen! I have seen!"



**In a later encounter Appar described Sivan's dance in the following hymn:**

குனித்த புருவமுங் கொவ்வைச்செவ் வாயிற் குமிண்சிரிப்பும்
பனித்த சடையும் பவளம்போன் மேனியிற் பால்வெண்ணீறும்
இனித்த முடைய வெடுத்தபொற் பாதமுங் காணப்பெற்றால்
மனித்தப் பிறவியும் வேண்டுவ தேயிந்த மாநிலத்தே.

Kuniththa puruvamung kovvaichchev vaayit kuminsirippum
Paniththa sadaiyum pavalampoan maeniyit paalvenneerum
Iniththa mudaiya veduththapot paathamung kaanappetrraal
Maniththap piraviyum vaenduva thaeyintha maanilaththae

**In english this translates to:**

the curved eyebrows, the gentle smile in the red lips which are like the fruits of the common creeper on the hedges. The cool matted locks the white ashes resembling milk smeared on the form which is red as coral. If one is fortunate to see the beautiful and sweet foot raised in dance, Being born in this wide world as a human being is also desirable.

**To be continued...**



# Thai Pongal: A Festival of Gratitude

As the date of the 14th of January arrives, Tamils scramble for last-minute arrangements and preparations for one of their most important festivals, Thai Pongal. Thai Pongal has been celebrated yearly, worldwide by Tamils. This culturally significant festival is essentially an act and celebration of gratitude that is expressed to mother nature, the sun and the various animals that help to contribute to a bountiful harvest. Thai Pongal is usually celebrated at the end of harvest, which usually falls on the 14th or 15th of January.

It has evolved as a festival related to the farming way of life of Tamils and the natural tie between people and the earth they cultivate. In the course of time, Thai Pongal has evolved into a cultural activity with influences from Saiva, mainly the worship of the Sun, Suryan, for his blessings in the growth of crops. As the festival is a manifestation of unity, community, and spirituality, which helps to bring the individual to their family and eventually to nature, its importance grew in value. The festival is no longer confined to South India; rather, Tamil communities all over the world participate in it and thus have become one of the most long-standing cherished festivals of Tamils.

Pongal is one of the major harvest festivals celebrated by Tamilians all over the world. It falls on the 14th day of January month every calendar year, marking the beginning of the six-month journey of the sun northwards. It is celebrated with great enthusiasm in gratitude for the bountiful harvest and to appease the Sun, Earth, and the cattle which help in the growth of crops. Kolam which is drawn on the ground and at the house entrance to allow good fortune in and outwards, pushing bad ones. Kabbadi Some of the traditional games include Kabbadi. Kabbadi is a team game that requires physical stamina and skill. This sport is enjoyed by children and adults during festivals, which contributes to forming community spirit.  One of the most important aspects of Thaipongal is the cooking of Pongal, a unique rice preparation that is both savoury and sweet in flavour, made from newly harvested rice, milk, jaggery, and ghee. Generally, families build wooden structures that act as a stove for the Pongal, which is then prepared at the front of the house. Pongal is a symbolic food of harvest, it is normally prepared in an open pot over a stove or, for that matter, over an open fire. The dish is then traditionally offered as a part of the prayers and celebrations and shared with family and friends. Tamils offer thanks to the Sun and other gods for the plenty of the harvest. Offerings usually involve freshly harvested grains, fruits, and other food items like Aval, Vada and Pongal. Most of them offer special prayers for health, wealth, and good fortune. Thai Pongal also involves devotees visiting temples. Some may also make offerings of fruits, flowers, and Pongal (the dish) to gods as a token of gratitude.



Nianthri Vijekumaran
Grade 9,
St Margaret's Grammar
Burwick

Apart from Thaipongal, there are other varieties of Pongal celebrated across different regions in South India. These include Mattu Pongal, a celebration of cattle, which falls on the second day of the four-day festival and Kanum Pongal, a day for family reunions and relaxation. These days are also associated with different rituals, such as worshipping cows, decorating cattle, and going on outings with family. While each day has its unique customs, the basic theme of giving thanks for nature's bounty is uniform.

In essence, Thai Pongal is also a time of expressing gratitude for the Tamils. Through its various rituals, like offering prayers to the Sun, preparation of Pongal, traditional games, and temple visits, Thai Pongal helps in building good relationships and a sense of unity within a community. Gratitude expressed for the harvest, the sun, and the animals indicates respect and harmony with nature. It is a symbol of hope, prosperity, and shared joy that Thai Pongal has enjoyed through generations.

# Conscious being and Inert objects

**Last month Summary :**

Sivakan, an 8-year-old boy, discussed with his friends the barriers preventing souls (Uyirkal) from knowing the Lord Almighty. He explained that while the Lord is all-knowing and possesses infinite intelligence, souls have limited understanding, constrained by their senses, mind, and intellect. Out of compassion, the Lord provides the body, environment, and circumstances necessary for the soul to gain knowledge through countless cycles of birth and death. Sivakan elaborated that the soul's bondage (paasam) arises from three impurities: aanavam (ignorance of the Creator), vinai (karma), and maayai (causal matter).

So far through analysis and discussion we arrived at these facts without ambiguity - 1. existence of the Lord Almighty and 2. existence of paasam (bonding) entity 3. this paasam entity prevents me from knowing the Lord Almighty since it clouds the soul's intelligence.

It leads us to the next logical enquiry. In spite of yearning to know the Lord I continue to remain without knowing Him. What will happen to me? Where do I stand?

We generally know that absence of cold weather generally indicates absence of snow. By this argument, when it is cold, the presence of snow is understood. Similarly it is to be understood that when the body functions cease to exist, there is no soul (uyir) in the body. Extending this logic it is understood that the soul is present when the body is actively functioning. When this was said, one of the friends said that 'this soul is what we mean by I. Our discussion continued. 'The soul referred to as 'I' is an intelligent entity. But the body is inert, devoid of intelligence.



So we agreed that in this world there are two types of entities. One is unintelligent things (non-living things) like stone, mountains, rivers and so on. They lack intelligent functioning. The other category is conscious intelligent beings (living beings) like plants, birds, animals, human beings and so on. They all have a body through which they function. The bodies of the intelligent living entity are inert while the souls are intelligent. This raised a lot of doubts about the nature of the soul (uyir) and what it really means. We knew these questions needed deeper analysis, so we planned to explore them in the discussions that followed.

**Saiva Philosophy Reference:**

The takeaway of this discussion is that the soul (Uyir) is an intelligent and conscious entity distinct from the inert, unintelligent nature of the body and material world. The body functions as a vessel for the soul, but it is the soul's presence that animates the body. This distinction highlights the existence of two categories of entities: the inert, non-living and the conscious, intelligent.

# தென்னாட்டு நிகழ்வுகள்



சிவகுரு ஆதீன திருமடம் கட்டியெழுப்ப வேண்டி தென்னாட்டில் வழிபாடுகள் (28-12-2024)

மார்கழித் திங்கள் வளர்பிறைக் கழுவாய் வழிபாடுகள் (28-12-2024)





திருவாசகப் பேச்சுப் போட்டிக்கான தேர்வுகள் (22-12-2024)



உரும்பிராய் அருள்மிகு மலைவளர்காதலி கோயிலில் திருவாசக முற்றோதல் (28-12-2024)



தென்னாடு ஐம்பூதநாதர் திருக்கோயிலில் திருவாசக முற்றோதல் (31-12-2024)

# தென்னாட்டு நிகழ்வுகள்



கார்த்திகைத் திங்கள் நிறைமதி வழிபாடும் இதழ் வெளியீடும் (15-12-2024)





மார்கழிப் பெருவிழா (25-12-2024)

தென்னாடு செந்தமிழ் ஆகம சிவமடம் மற்றும் சைவ மாணவர் சபையின் ஐம்பத்து மூன்றாவது திங்கள் செய்தியிதழ் “தென்னாடு”, சிவத்திரு. சிவஞானம் ஜெயானந்தன் அவர்களால் வடிவமைக்கப்பட்டு நல்லூர் “மதி நிறங்கள்” (மதி கலர்ஸ்) பதிப்பகத்தில் அச்சிடப்பட்டு, மேழ விழுகம்ப ஊழி ஆண்டு 2298 சுறவம் நல்லோரை தைத் திங்கள் 1ம் நாள் அன்று (14-01-2025 செவ்வாய்க்கிழமை) தென்னாட்டில் வெளியிடப்பட்டது. முதலாம் தமிழ்ச் சங்கம் கண்ட தென்னாடு என்பதை மனதில் நிறுத்தி, தென்னாடு செய்தியிதழையும் இயன்றளவு பிறமொழிக் கலப்பின்றி தெய்வத்தமிழில் தர முயற்சிக்கிறோம். சைவ மாணவர் சபை பதிவு இலக்கம் - HA/4/JA/343.

தொலைபேசி +94 21 222 9722 | புலனம் +94 (70) 770 1111| மின்னஞ்சல் thennavan@thennadu.org

fb.com/thennadu | youtube.com/thennadu | www.thennadu.org